

இதழ்-07
16.08.2020
தூமி
பல்சுவை
இன்னொரு ஆண்டாள்
மொசாட்
என்னும் தனிக்காட்டு ராஜா
சிங்கிரித்தலைவன்
பெருவெள்ளத்திற்கான பயணம்

## ஆசிரியர் பதிவு

# எல்லோருக்கும் கிடைக்க வேண்டும்

உலகத்தின் இயக்கம் கொரோனாவிற்கு பிறகு பலவாறாக மாற்றமடைந்துள்ளது. பல மைல் தூரம் பிரயாணம் செய்து நடைபெற்ற கூட்டங்கள் எல்லாம் இணையம் ஊடாக வீட்டில் இருந்தவாறே நடைபெற ஆரம்பித்துள்ளன. அந்த வகையில்த்தான் இணையவழி கல்வியும் பிரபல்யமடைந்து வருகிறது. இணையவழி கல்வியை அரசும் முன்னெடுக்கின்ற அதேசமயம் பல ஆசிரியர்களும் பிரத்தியேகமாக கட்டண அடிப்படையிலும், இலவசமாகவும் கற்பித்தலை முன்னெடுத்துள்ளனர்.

இணையவழி கற்பித்தலுக்கு கணிசமான வரவேற்பு இருப்பதைப்போல எதிர்ப்பும் இல்லாமல் இல்லை. எதிர்ப்புக்கு கட்டணங்கள் மட்டுமே காரணமல்ல. இணையம் எல்லோருக்குமே சாத்தியமில்லை என்பதுவும் பிரதான காரணம். இதற்கு பொருளாதாரம் ஒரு காரணமாக இருந்தாலும், இணையவசதி ஒழுங்காக எல்லா இடங்களுக்கும் கிடைப்பதில்லை என்பது முக்கிய பிரச்சனை. நகர்ப்புறங்களில் 5Gதொழில்நுட்பம் நிறுவ ஆயத்தமாகிவிட்ட நாம் சில கிராமங்களில் 3G கூட கிடைப்பதில்லை என்பது குறித்து இன்னும் செயற்படாமை வருத்தமளிக்கிறது. மாணவர்களின் கல்விக்கான பொருளாதார பிரச்சனைகளை நிவர்த்தி செய்ய பல தனிநபர்கள் தயாராயுள்ள போதும் இணைய அலைக்கற்றைகளின் வினைத்திறன் குறைவால் பல மாணவர்களுக்கு கிடைக்கும் வாய்ப்பு சிலருக்கு இல்லாமல்ப் போகிறது.

இல்லாதவற்றைத்தேடிப் போகாதீர்கள் என்று சொல்லவில்லை. இருப்பவற்றை எல்லோருக்கும் கிடைக்கச் செய்துவிட்டு இல்லாதவற்றைத்தேடிப் போங்கள் என்றுதான் சொல்கிறோம்.

# அட்டைப்படம் பற்றி...

**ஒளிப்படம் : தெய்வேந்திரம் ஆதவன்**

அந்த பிஞ்சுக் கரங்கள் தாங்கியுள்ள வேலை ஆயுதம் என்பார்கள், ஆண்டவன் என்பார்கள், அறிவியல் என்பார்கள், அறியாமை என்பார்கள். தூற்றலையும், போற்றலையும் தன்னகத்தே கொண்ட வேல் தமிழரின் தவிர்க்க முடியாத அடையாளம். ஒளிமயமான எதிர்காலத்திற்கு அறிவு தான் மூலதனம். அந்த அறிவு வேல் போல் ஆழமானதாகவும், பரந்ததாகவும், கூர்மையானதாகவும் இருக்க வேண்டுமென்பதைத்தான் வேல்த்தத்துவம் சொல்கிறது. ஆண்களின் சக்தி பெண்கள் தான் என்பதையும் வேல்த் தத்துவம் சொல்லாமல் சொல்கிறது. ஆம், அன்னை பராசக்தி பாலகன் முருகனுக்கு துணையாக அளித்த சக்தி தான் வேல் என்கிறது இந்துமதம்.

மாயையாய் நின்ற சூரனை வேல் கொண்டு முருகன் அழித்தது போல எம்மை சூழ்ந்துள்ள மாயைகளை அறிவைக் கொண்டு அழிக்க வேண்டுமென்கிறது நவீன வேல்த்தத்துவம். அறிவு என்று அடையாளங்களை விமர்சிக்காது அடுத்த தலைமுறைக்கு ஊடுகடத்துங்கள் என்ற செய்தியை சொல்லும் இந்த புகைப்படம் காலத்தின் தேவை.

## இவ்விதழில்

# துமித்தவை.

04 வழுக்கியாறு – ஆய்வுத்தொடர்
06 மிக்ரையின் தலையிடி
08 குறுக்கெழுத்துப்போட்டி
09 சித்திராங்கதா
12 நான் காணும் உலகங்கள் யார் காணக்கூடும்
16 இன்னொரு ஆண்டாள்
20 வைத்தியன் உறுப்புக்கள்
21 மொசாட் எனும் தனிக்காட்டு ராஜா
24 என் இதயம் எழுதும் சொல்
26 குடாநாட்டின் சுற்றுலா – ஆய்வுத்தொடர்
28 மாஸ்லோவின் தேவைக்கோட்பாடு
29 துர்முனிகள்
30 இந்திய சுதந்திரத்தில் தமிழர்கள்
33 முதுசம்
36 சிங்ககிரித்தலைவன்
39 ஒன்றாவோம்
40 யுவராஜ் எனும் யுகவீரன்

thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

## வழுக்கியாற்றின் வரலாறு

### ஆய்வுகளும் சான்றுகளும்




T.K.மகி

வழுக்கியாற்றுடன் தொடர்புபட்ட குடியேற்றங்கள் வரலாற்று காலத்தில் இருந்து யாழ்குடாநாட்டில் காணப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன. இச்சான்றுகள் பெரும்பாலும் கந்தரோடை கிராமத்தை மையமாகக் கொண்டே காணப்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. இது தொடர்பான முதலாவது தொல்லியல் ஆய்வானது P. E. பீரிஸ் என்பவரால் 1917ம் மற்றும் 1919ம் ஆண்டுகளில் முதன்முறையாக ஆரம்பிக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து 1966ம் ஆண்டில் கலாநிதி C.கொடகும்புற, 1970 இல் கலாநிதி விமலா பேக்லியும் அவரது அமெரிக்க பென்சில்வெனிய பல்கலைக்கழக நூதனசாலை அணியினர் நடாத்திய ஆய்வுகள் மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழக தொல்லியல்துறையினர் 1980 மற்றும் 2011ம் ஆண்டுகளில் மேற்கொண்ட ஆய்வுகள் முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும். இவ் ஆய்வுகளின் மூலம் வழுக்கியாறும் அதனுடன் தொடர்புபட்ட மனிதக்குடியேற்றங்கள் பற்றிய பல்வேறு வரலாற்றுத்தகவல்கள் வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளன. இவ் ஆய்வுகளின் மூலமாக வழுக்கையாற்றை அண்டிய கந்தரோடைக்குடியேற்றமானது ஏறக்குறைய 2500 ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்றும் இக்குடியேற்றமானது இலங்கையின் புராதன குடியேற்றங்களான அநுராதபுரம், திஸ்ஸமகாராம, மன்னார் போன்றவற்றுடன் ஒப்பிட்டு நோக்கக்கூடியது என்ற முடிவிற்கு வரமுடிகின்றது. மேற்குறித்த இக்குடியேற்றங்கள் நீர்நிலைகளை மையமாகக்கொண்டு உருவாகியவையாகும்.

மூன்று வேறுபட்ட காலங்களைச்சேர்ந்த கல்வெட்டுக்கள் கந்தரோடைப்பகுதில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அவை 2ம், 3 – 4ம், 10 நூற்றாண்டுகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. பெரும்பாலான யாழ்ப்பாண புராதன வரலாற்று தமிழ் நூல்களும் நம்பொத்த என்ற 14ம்நூற்றாண்டைச் சேர்ந்த சிங்கள நூலும் புராதன கந்தரோடை பற்றியும் அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறை பற்றியும் விபரிக்கின்றன.

கந்தரோடை குடியிருப்பானது வழுக்கியாற்று கரையோரத்தை அண்டி உருவாக்கப்பட்டது. இயற்கை நிலத்தடி நீர்வளமும், ஒழுங்கமைக்கப்பட்ட வழுக்கியாறு குளத் தொடர் கட்டமைப்புக்களும் புராதன மக்களின் வாழ்வுக்கு பெரிதும்





வர்த்தக மற்றும் கலாச்சார தொடர்புகளை வெளி இராச்சியங்களுடன் பேணக்கூடிய சந்தர்ப்பம் அமைந்தன. புராதன கந்தரோடை ஆனது தென்னிந்தியா, சீனா, உரோமம் மற்றும் தென்னிலங்கையுடன் நெருக்கமான உறவுகளை பேணியமைக்கான ஆதாரங்களாக கந்தரோடையில் இருந்து கிடைத்த தொல்லியல் சான்றுகளை குறிப்பிட முடியும். சீன மட்பாண்டங்கள் மற்றும் சீன, உரோம நாணயங்கள் என்பன குறிப்பிடத்தக்க சில உதாரணங்களாகும்.

உறுதுணையக இருந்துள்ளன. வழுக்கியாறானது புராதன காலத்தில் நீர்வழி போக்குவரத்திற்காகவும் கந்தரோடை இராசதானியை எதிரிகளின் தாக்குதலில் இருந்து பாதுகாக்கும் பாதுகாப்பு அகழியாகவும் பயன்பட்டதுடன் இராசதானி மழைவெள்ளத்தில் மூழ்குவதை தடுப்பதற்கான வெள்ள வடிகாலாகவும் பயன்பட்டுள்ளது.

வருடாவருடம் உருவாகும் வெள்ளநீரை புராதன மக்கள் சிறந்த வினைத்திறனுடனும் தூரநோக்குடனும் குளங்களை அமைத்து அவற்றில் சேகரித்தும் வெள்ளநீர் அணைகள் மூலமாக (தற்போது இவை வெள்ளநீர்க்கதவுகளாக ( Flood control gates ) என அறியப்படுகின்றன) வயல் நிலங்களில் தேக்கியும் நெற்செய்கைக்கு பயன்படுத்தியதுடன் சிறுதானியங்களையும் விளைவித்தனர்.

புராதன துறைமுகங்களான ஜம்புகோளப்பட்டினம் (காங்கேசன்துறை) சூராதித்த அல்லது ஊறாத்தோட்டை எனப்படும் ஊர்காவற்துறை மற்றும் மாதோட்டம் எனப்பட்ட மன்னார் போன்றவை கந்தரோடை இராசதானிக்கு அருகில் காணப்பட்டதனால்

கந்நரோடையை மையமாகக்கொண்ட தமிழர் வரலாறானது பெரும்பாலும் அழிவடைந்துள்ளது அல்லது இன்னும் அறியப்படவில்லை என்பது எமது துரதிஸ்டமாகும். கந்தரோடையை பல மன்னர்கள் ஆட்சி புரிந்தாலும் 8ம் நூற்றாண்டு பகுதியில் கந்தரோடையை ஆட்சி செய்த உக்கிரசிங்கன் மற்றும் அவர் மனைவி மாருதப்புரவீகவல்லி ஆகியோர் பற்றிய வரலாறு மட்டுமே ஓரளவு நூல்கள் வாயிலாகவும் பிரதேசமக்களின் செவிவழிக்கதைகள் மூலமாகவும் அறியக்கிடைக்கின்றது. இதன் வாயிலாக வழுக்கியாறு வடிநிலத்தில் காணப்படும் குளங்கள் மற்றும் கோயில்களுடன் இவர்கள் கொண்ட நெருக்கமான தொடர்புகள் பற்றி அறிய முடிகின்றது.

(ஆறு ஓடம்)



## மருத்துவம் போற்றுதும்

சுகமாரன் சுஜன்.
4ம் வருடம்,
கொழும்பு மருத்துவ பீடம்.

# மிக்ரையின் தலையிடி (Migraine)

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருடைய பெரிய பிரச்சனை தலை இடி( *headache*) . தலையிடி என்றாலே தலையிலே கட்டி வந்துவிட்டது என்று ஓடிச்சென்று சி.டி ஸ்கான் *(ct scane)* எடுக்கும் பலர் இன்று உள்ளார்கள். அப்படியென்றால் தலையிடிக்குரிய பிரதானகாரணம் தலையில் வரும் கட்டியா? வாருங்கள் பதில் பார்ப்போம்.

தலையிடியிலே இரண்டு பிரதான வகைகள் உண்டு.
ஒன்று *primary headache* .
மற்றயது *secondery headache*.
*Primary headache* என்பது யாது என்றால் , எங்களுடைய வருத்தமே தலை இடிதான். அதாவது தலையில் வேறு பிரச்சனைகள் இல்லை. பெரும்பான்மையான தலையிடிகள் இந்தப்பிரிவில் தான் அடங்கும். பொதுவாக வருடக்கணக்காக இருக்கும். ஆபத்து குறைந்தவை ஆகும். டென்சன் தலை இடி, ஒற்றை தலைவலி எனப்படும் மிக்ரைன் *(migraine)* , *cluster headache* போன்றவை எல்லாம் இவற்றுள் பிரதானமாக அடங்கும்.

ஆனால் *secondery headache* மிக ஆபத்தானவை. அதாவது மூளையிலோ , உடலிலோ ஏற்படும் வேறு வருத்தங்களின் விளைவாக ஏற்படும் தலை வலிகள் ஆகும். கட்டிகளோ, மூளையின் இரத்தக்கசிவுகளோ, கிருமிகளாலோ , திடீர் உயர்குருதி அமுக்கங்களாலோ ஏற்படலாம். எனவே இங்கே பிரச்சனை தலை இடி அல்ல. குறித்த வருத்தம் ஆகும். இந்தத் தலை இடிகள் பொதுவாக குறுகிய காலத்திலே ஏற்படும். எனவே இந்தத் தலை இடிகளுக்கு உரிய சில அறிகுறிகள் இருக்கிறது.

1- திடீர் என ஏற்படும் தாங்க முடியாத, இதற்கு முன் அனுபவிக்காத தலை இடி ( குருதி பெருக்கு)
2- அதிகாலையில் நித்திரைவிட்டு எழும்போது ஏற்படும் தலை இடி, வாந்தி ( மூளையின் கட்டிகளாக இருக்கலாம்)
3-தலை இடியோடு வலிப்புக்கள்
4-தலை இடியோடு உடலின் ஏதும் பகுதிகள் இயங்காமல் போதல்
5- தலை இடியோடு காய்ச்சல்
6- 50 வயதிற்கு பின் வருகின்ற புதிய , இதற்கு முதல் அனுபவிக்காத தலையிடிகள்

இந்த அறிகுறிகள் இருந்தால் உடனடியாக வைத்திய உதவி நாட வேண்டும்.

இப்பொழுது இந்தக்கட்டுரையின் விடயத்திற்கு வருவோம். மிக்ரைன்( *migraine)* எனப்படுவது உண்மையாக ஆபத்து அற்ற தலைவலியாக இருப்பினும் அன்றாட செயல்பாடுகளை மிக மோசமாக பாதிக்கும். மூளையின் நரம்புகளால் வெளியிடப்படும் சில இரசாயனங்கள் நோ நரம்புகளை தூண்டுவதாலும், குருதி குழாய்களை விரிவடைய செய்வதாலும் ஏற்படும். பெண்களிற்கே அதிகமாக இருக்கும். இளம் வயதிலே ( 20,25,30) ஆரம்பித்துவிடும்.
மிக்ரைனில் இரண்டு பிரதான வகை உண்டு.
*1-with aura*
*2-without aura.*

20% ஆனவர்களிற்கு *with aura* மிக்ரைன் இருக்கும். அதாவது *aura* என்பது யாது என்றால் மிக்ரையின் தலையிடி ஆரம்பிக்க ஒரு மணி நேரத்திற்கு முன் உடலில் ஏற்படும் சில மாற்றங்கள். உதாரணமாக



*1- கண்களில் வெளிச்சம் விட்டு விட்டு பத்துவது போல, மின்மினி பூச்சிகள் பறப்பது போல, வரிவரி கோடுகள் தோன்றுவது போல, கறுப்பு கறுப்பு புள்ளிகள் தோன்றுவது போல தோன்றும்.*
*2-உடலில் ஒருபக்கத்தில் கை , கால், ஒருபக்க முகம் போன்றவற்றில் விறைப்பு, வலி, தளர்ச்சி ஏற்படும்.*

*80% ஆனவர்களிற்கு இந்த எந்த அறிகுறிகளும் இன்றி தலைவலி ஏற்படும்.*

*மிக்ரையின் தலைவலி ஏற்பட்டால் , குறைந்தது 4 மணித்தியாலயங்கள், கூடியது 3 நாட்கள் இருக்கும்.*

*மிக்ரையின் தலைவலி எப்படி இருக்கும்?*
தலையின் ஒருபக்க வலி, கண்களை சுற்றிய வலி, தலையில் இருந்து இருவர் குத்துவது போன்ற வலி, வாந்தி, வாந்தி எடுப்பது போன்ற உணர்வு. வெளிச்சம், சத்தம் தலைவலியை கூட்டும். எனவே இருண்ட , சத்தமற்ற அறையிலே நித்திரை கொள்ளவேண்டும் என்ற உணர்வு ஏற்படும். அன்றாட வேலைகளை செய்யமுடியாத கடும் வலி இருக்கும்.

*என்ன என்ன காரணங்களால் மிக்ரையின் தூண்டப்படும்.*
*1- உடலின் ஹோர்மோன்களில் ஏற்படும் மாற்றம். எனவே பெண்களிற்கு மாதவிடாயை அண்டிய நாட்கள், கர்ப்ப காலம், கருத்தடை மாத்திரையை எடுக்கும் நாட்கள்*
*2- chocolate, சீஸ், யோகட் , வைன் போன்ற உணவு வகைகள்.*
*3-நித்திரை ஆற்ற நாட்கள்*
*4-கடுமையான வேலைகள், stress உள்ள நாட்கள்.*

*சில பேரிற்கு வருடக்கணக்காக எல்லாம் தலைவலி இருக்கும். ஆனால் அவைகள் மூளையில் ஏற்படும் கட்டியாக முடியாது. வருடக்கணக்காக மூளையில் கட்டி இருந்தால் அது தலையை விட பெரிதாக வளர்ந்து விடும்.*

*எனவே மேற்கூறிய அறிகுறிகள் மிக்ரையின் இருந்தால் வைத்திய ஆலோசனை நாட முடியும். மிக்ரையின் தலை நோவை குறைக்க மட்டும் அல்ல, மிக்ரையின் தலையிடிக்கு என்று தனி மருந்துகள் இருக்கிறது.*

# குறுக்கெழுத்துப்போட்டி — 03

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 சீ | 2 றா | 3 ப் | 4 பு | ரா | 5 ண | 6 ம் | |
| 7 வ | பு | ன | ம் | | 8 ம் | ச | 9 க |
| க | | 10 ப | அ | 11 ச | கு | ன | ம் |
| சி | | ம் | | கி | | 12 ன் | மா |
| 13 ந் | 14 த | சொ | 15 ம் | | | | ர் |
| 16 தா | லி | | 17 அ | 18 ர | 19 க | ன் | க் |
| 20 ம | க | 21 ர | ந் | த | ம் | | |
| ணி | | 22 தி | த | ம் | ர | ந் | |

## பரிசுக்குரியவர்

*ம. கார்த்திகா*
*தரம் 10*
*மட்/ ஆனைப்பந்தி இந்து மகளீர் கல்லூரி*

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | ■ | 3 | 4 |
| | ■ | | ■ | ■ | 5 | | |
| | ■ | 6 | | 7 | | | ■ |
| | ■ | | ■ | 8 | | | ■ |
| 9 | 10 | | ■ | | ■ | ■ | 11 |
| ■ | | ■ | 12 | | ■ | 13 | |
| 14 | | | | | 15 | | |
| 16 | | ■ | 17 | | | | ■ |




## இடமிருந்து வலம்

*1- கண்ணகி பிறந்த ஊர்*
*3- பேராசை என்று பொருள்படும்.*
*5- சின்னஞ்சிறிய பறவை*
*6- இரு மனம் இணையும் விழா*
*8- சிறு தானியங்களில் ஒன்று*
*9- நாளினை குறிப்பிட உதவுவது*
*12- பெண் என்றும் சொல்லலாம்*
*13- முக்கனிகளில் ஒன்று*
*14- மிக இன்றியமையாதது என்ற பொருள்படுவது*
*16- புகழ்ந்து பாடுவது*
*17- கண்ணாடியில் தெரிவது*

## மேலிருந்து கீழ்

*1- ஒரு நட்சத்திரம்*
*2- அறிவுரையைக் குறிக்கும்*
*3- பூக்கும் பூவின் ஒரு நிலை*
*4- நீர்நிலை ஒன்று*
*5- குலத்தளவே ஆகுமாம் இது என்கிறார் ஔவை*
*7- மகிமை என்றும் சொல்லலாம்.*
*10- மின் அல்லது வெப்பத்தைக் கடத்தக்கூடியது.*
*11- ஓர் இராசி*
*12- மாயங்கள் காட்டுபவன்*
*13- சிலருக்கு இருளைக்கண்டால் இது ஏற்படும்.*
*14- அஃறிணையொருமையைச் சுட்டும் சொல்*
*15- பத்தையும் பறக்க வைப்பது(தலைகீழ்)*

**அனுப்ப வேண்டிய.......**
மின்னஞ்சல் முகவரி :~ thumi2016@gmail.com
இறுதித்திகதி :~ 27.08.2020

**காவ்யமோகன்**

# சித்திராங்கதா



**ஆடல் 07**

**மந்திரி மனை**

நல்லூர்க்கோட்டைக்குள் ஒரே ஆரவாரம். வழக்கமாய் நிலவும் விண்மீன்களும் மாத்திரம் விழித்திருக்கும் பொழுது அது. ஆனால் இன்று விளக்குகளை ஏற்றிக் கொண்டு கோட்டைக்குள் எல்லோரும் விழித்திருக்கிறார்கள். தயாரிக்கப்பட்டு வைத்திருந்த துகிலில்லங்கள் யாவும் விளக்கொளியில் மின்ன அங்கே படைவீரர்களுக்கு விருந்துபசாரம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அரண்மனைத்தோப்பின் ஒருபுறம் கூத்து நிகழ்வதற்கான ஆயத்தங்கள் நடந்துகொண்டிருந்தன. அரசவைப்புலவர் செம்பகமாப்பாணர் தலைமையிலான திருநெல்வேலி புலவர் அவையின் ஏற்பாட்டில் வீரத்தளபதிக்கு சிறப்பு விருந்தாய் அந்நிகழ்வு நிகழக் காத்திருக்கிறது.

இந்தக்காட்சிகளை எல்லாம் அரண்மனை மேல் மாடத்திலுள்ள விருந்தினர் மாளிகையில் அமர்ந்து கண்காணித்த வண்ணமே சங்கிலிகுமாரனும், ஏகாம்பரம் தொண்டமனாரும், வருணகுலத்தானும், மகிழாந்தகனும் உணவருந்திக் கொண்டிருக்கின்றனர்.

மகிழாந்தகன் முகத்தில் மாத்திரம் ஒரு வாட்டம். அவன் வேறு ஏதோ சிந்தனையில் இருக்கிறான் என வருணகுலத்தான் ஊகித்தான்.

'மகிழாந்தகரே ஊராத்துறையில் வரவேற்பு ஊர்வலம் குறித்து கேட்டபோது மன்னரின் செயலிற்கு அர்த்தங்கள் ஆயிரம் என்று உரைத்தீரே- அந்தக்காத்தவராயன் எறிந்த ஈட்டி மூலம் ஓரிரு அர்த்தங்கள் ஊகித்துக்கொண்டேன். மீதி அர்த்தங்களை நான் இப்போது அறிந்துகொள்ளலாமா?' என்று வேடிக்கையாக தொடங்கினான் வருணகுலத்தான்.

பேரோசையாய் சிரிப்பொலி கேட்டது. மகிழாந்தகனும் சிரித்தான்.

'ஆம் அரசே தாங்கள் தான் தளபதியாரின் சந்தேகத்தை தீர்க்க வேண்டும்? செயலுக்கு முன் புகழை ஏற்கமாட்டேன் என ஊராத்துறையில் விடாப்பிடியாய் நின்றார். அவரை யானை மீதேற்றி அழைத்து வருவதே எனக்கு பெருஞ்சிரமமாகிவிட்டது' என்று சிரித்தபடியே சொன்னான் மகிழாந்தகன்.

சங்கிலியனும் தன் சிரிப்பை அடக்கி கொண்டு பேசத்தொடங்கினான்.


'தளபதியாரே, மகிழாந்தகன் கூறியது போல் ஆயிரம் இல்லாவிட்டாலும் ஒரு சில காரணங்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஆமாம். எம் முன்னோர்கள் கட்டியெழுப்பிய இந்த யாழ்ப்பாண சாம்ராஜ்யம் இப்போது எல்லாத் திசைகளிலும் ஆபத்தைக் கண்டுள்ளது. அந்நியர்கள், உள்நாட்டுச் சதிகாரர்கள், அவர்களுடன் சேர்ந்து தென்னிலங்கை மக்கள் என எல்லாப்பக்கமும் அபாயம் சூழ்ந்து இராச்சியத்தின் எதிர்காலத்தை எண்ணும் போது யாழ்ப்பாண மக்கள் வெளியில் சொல்லமுடியாத அச்சத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். எல்லாவற்றையும் தாண்டி எம் இராச்சியம் நிலைபெறுவது உறுதி. ஆயினும் மக்கள் மனதில் தேங்கிய அச்சம்? அதனைப்போக்குவது எப்படி? அந்த அச்சம் மக்கள் மனங்களில் அவநம்பிக்கையை வலுப்பெற வைக்கும்.

கோட்டை இராச்சியத்தை பறங்கியர் வசப்படுத்திக் கொண்டநாள் முதல் யாழ்மக்கள் மேலும் நிர்க்கதியாய் உணரத் தொடங்கியுள்ளனர். நலாப்பக்கமும் அவர்கள் மனநிலையை குழப்ப முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மக்களின் நம்பிக்கை அற்றுப்போய்விட்டால் நாம் என்ன போராடி எதைத்தான் வெல்ல முடியும்? இந்த அபாயத்தினை உணர்ந்தே மக்களின் நம்பிக்கை மீண்டும் புதுப்பிக்கப்பட வேண்டிய தேவையை இப்போது அவசியமாய் எண்ணினேன்.

அதனாலே வருணகுலத்தாரின் ஊர்வலத்தை பெருநம்பிக்கையின் விதையாக இட தீர்மானித்தேன். விமர்சையாக நடத்த ஏற்பாடு செய்தேன். தங்கள் வீரதீரச்செயல்களை பறை சாற்றினேன். பெரும்எண்ணிக்கையான வீரர்களின் ஊர்வலம் யாழ்வீதிகளில் வலம் வர வைத்தேன். புதைந்து போன மக்களின் நம்பிக்கையை அது மீண்டும் துளிர்விட வைக்கும் என்று முழுமையாய் நம்பினேன். எதிர்பார்த்தேன். ஆயினும் தங்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான செயல் நிகழும் என்பதை நான் சிறிதும் எதிர்பார்த்திருக்கவில்லை' என்று வேதனை மிகுந்த குரலில் கூறி முடித்தான்.

'ஆயினும் அரசே, அந்தக்காத்தவராயனை பிடித்து சேனாதிபதி முன் நிறுத்தியது




யாழ்ப்பாண மக்கள் அல்லவா? அந்தவகையில் எம்முயற்சி வெற்றிகண்டது என்று தானே அர்த்தம்'
என்றார் ராஜமந்திரி ஏகாம்பரனார் அவசரமாக.

வருணகுலத்தானும் அதை ஆமோதித்தவனாய் 'உண்மைதான் அரசே, காத்தவராயன் செயல் மூலமே தங்கள் செயலின் அர்த்தம் வலுப்பெற்றது. அச்செயல் மூலமே யாழ்மக்கள் என் மீது கொண்ட நம்பிக்கையை உணர்ந்து கொண்டேன். என் கடமை இன்னும் பெரிதாகிறது. யாழ்ப்பாண இராச்சியத்தை நிலைநிறுத்த என் உயிரின் இறுதியிழை வரை நான் போராடிக்கொண்டிருப்பேன்' என்றான் உறுதியான குரலில்.
'மிக்க நன்றி வருணகுலத்தாரே, இருந்தபோதும் தங்கள் பாதுகாப்பிற்கு இனி எந்தக்குந்தகமும் இங்கு விளைய நான் அனுமதியேன். ஆதலாலே தாங்களும் தங்கள் வீரர்களும் கோப்பாய் அரசமாளிகையில் தங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளேன். அதுவே மிகவும் பாதுகாப்பானது. எங்கள் முன்னாள் சங்கிலிய மகாராஜா பறங்கியனை எதிர்த்து நின்ற கொடூர யுத்தமொன்றின் இறுதியில் கோப்பாய் அரச மாளிகையிலே அவர் உயிர் பாதுகாக்கப்பட்டது. தாங்கள் இப்போது அங்கே தங்குவது தான் மிகப் பொருத்தமானதாய் உணர்கிறேன்' என்றான் சங்கிலிய குமாரன்.

'இல்லை மன்னா, தங்கள் கருத்தை மறுதலிப்பதற்காய் மன்னிக்க வேண்டும். பாதுகாப்பாய் இருப்பதற்கு வருணகுலத்தான் ஈழம் நோக்கி வரவில்லை. அத்தோடு யுத்த வியூகங்கள் குறித்து நான் சில நிலவரங்களை அறிய வேண்டியுள்ளது. அதனால் நான் நல்லூர்க் கோட்டையிலே தங்குவதற்கு தாங்கள் அனுமதியளிக்க வேண்டும். என்னுடன் நூறு உபதளபதிகள் இருக்கிறார்கள். அவர்கள் தலைமையில் படைவீரர்கள் கோப்பாய் மாளிகையிலும் யாழ்ப்பாண மக்கள் மத்தியிலும் பயணித்து நிலவரங்களை அறிவார்கள். நான் உபதளபதிகளை தினமும் இரவு கோப்பாய் மாளிகையில் சந்தித்துக் கொள்கிறேன். தாங்கள் அதற்கு அனுமதியளிக்க வேண்டும்' என்றான் வருணகுலத்தான்.
அரசர் சிறிது யோசனையில் இருந்தார்.
மந்திரியார் மன்னனைப்பார்த்து

'அரசே, வருணகுலத்தார் இப்போது கோட்டைக்குள் இருப்பதும் ஒருவகையில் சிறந்த யோசனைதான். கோட்டையிலிருந்து கோப்பாய்மாளிகைக்கு தினமும் சென்று வர வேண்டும். ஆதலால் தளபதியார் என்னுடைய மாளிகையில் தங்கிக்கொள்வதே இச்சமயம் உசிதமாகும்' என்றார்.

மந்திரியாரின் உட்கருத்தை உணர்ந்தவர் போல் அரசரும் 'அப்படியே ஆகட்டும் மந்திரியாரே. வருணகுலத்தார் மந்திரிமனையிலே தங்கிக்கொள்ளட்டும்' என்றான்.

வருணகுலத்தான் மந்திரி ஏகாம்பரனாரை மரியாதையோடு பார்த்தான். ஏதோ ஒரு வகையில் அவனுக்கு தஞ்சை ராஜகுரு கோவிந்த தீட்சிதருடைய ஞாபகம் வந்தது. கோவிந்த தீட்சிதர் மீது அவன் கொண்டிருந்த அதே மரியாதை இப்போது ஏகம்பரம் தொண்டமனார் மீதும் ஏற்பட்டது. தீர்க்கமான ஓர் அமைச்சராக ஏகாம்பரம் தொண்டமனாரை அவனும் நம்பினான்.

கூத்து ஆரம்பிக்கும் நேரம் நெருங்கிவிட்டது. படைவீரர்கள் உட்பட ஏராளமானோர் அரண்மனைத்தோப்பில் கூடிவிட்டனர். அரண்மனை பெண்டிர்களும் அங்கு இருக்கைகளில் அமர்ந்திருந்தனர். தொலைதூரத்தில் இருந்தபடியே வருணகுலத்தான் மகாராணி மஞ்சரிதேவியைக் கண்டு வணங்கினான்.

மஞ்சரிதேவிக்கு அருகில் ஓர் இளமங்கை தன்னை வணங்குவதையும் வருணகுலத்தான் கண்டான். யாரென்று அறியவில்லை. ஆனாலும் வணங்கினான். மகிழாந்தகனை கேட்கலாம் என பார்த்தபோது ஆசனத்தில் மகிழாந்தகனை காணவில்லை.

அங்கே மேடையில் கூத்து ஆரம்பமாகிறது...

### வரலாற்றில் இருந்து...

நல்லூர்க் இராஜதானிக்குப் பாதுகாப்பாக மூன்று சிறு கோட்டைகள் இருந்ததைப் போர்த்துக்கேயரின் குறிப்புகள் கூறி நிற்கின்றன. இவை கோப்பாய், பண்ணைத்துறை மற்றும் கொழும்புத்துறை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டிருந்தன. பண்ணைத்துறைக்கு அண்மையில் காணப்படும் கொட்டடி என்பது கோட்டையடி என்பதன் திரிபாகவே படுகின்றது. இக்கோட்டைகளை நல்லூர் இராஜதானியுடன் இணைக்கப் பிரதான வீதிகள் இருந்ததையும், இவ்வீதிகள் நெடுக ஆங்காங்கே காவலரண்கள் இருந்தமையும் போர்த்துக்கேயரின் நூல்கள் கூறுகின்றன.

கோப்பாய்க் கோட்டைபற்றி சுவாமி ஞானப்பிரகாசர் கோப்பாய்ப் பழைய கோட்டை என்னுமொரு கட்டுரையொன்றினை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். அதிலவர் கோப்பாய்ப் பழைய கோட்டை இருந்ததாக அறியபடும் பகுதி பற்றி விளக்குவார். திருமதி வூட்ஸ்வேர்த் என்பவருக்குச் சொந்தமான *The Old Castle* என்றழைக்கப்படும் காணியிலேயே தமிழ் மன்னர்களின் கோப்பாய்க் கோட்டை இருந்ததாக அவர் குறிப்பிடுவார். அதற்காதாரமாக அப்பகுதியினைச் சுற்றியுள்ள பகுதி 'கோட்டை வாய்க்கால்' என்றழைக்கப்படுவதைச் சுட்டிக் காட்டுமவர் அதுவே மேற்படி கோப்பாய்க் கோட்டையின் அகழியாக இருந்திருக்கக் கூடுமென்பார். அப்பகுதியிலும், மேற்படி கோட்டை அமைந்திருந்ததாகக் கருதப்படும் காணியிலும் காணப்படும் கட்டடச்சிதைவுகள் கோப்பாய்க் கோட்டையின் சிதைவுகளாகவிருக்கக் கூடும். இது பற்றிய அகழ்வாராய்வுகள் போதிய அளவில் நடத்தப்பட வேண்டும். சுவாமி ஞானப்பிரகாசர் குறிப்பிட்டுள்ள மேற்படி 'பழைய கோட்டை' பகுதி இன்று பல காணித்துண்டுகளாகப் பிரிவு பட்டுப் போயிருப்பதையே எண்பதுகளில் அப்பகுதிக்குச் சென்றபோது அறிந்து கொள்ள முடிந்தது. நம்மவருக்குக் காணியில் இருக்கும் ஆர்வம், காணப்படும் பழமையின் சின்னங்களைப் பேணுவதிலில்லை என்பதற்கு மேற்படிக் கோப்பாய்க் கோட்டையின் இன்றைய நிலையும், நல்லூர் இராஜதானியின் இன்றைய நிலையும் புலப்படுத்தும்.

நன்றி -'நல்லூர் இராஜதானி: நகர அமைப்பு' - வ.ந.கிரிதரன்

# நான் காணும் உலகங்கள்



## யார் காளை கூடும் ?

*Homo sapiens* எனும் ஒரு விலங்குக்கு மனிதன் என்று பெயர். சிந்திக்கும் இயல்பிருக்கிறது என்பது தனிச்சிறப்பு. அதை கொண்டு ஓமோன்களின் துணையோடு உணர்வுகளை(*Feelings*) உருவாக்கி கொண்டுள்ளார்கள். இந்த உணர்வுகளால் தன் இனம் ,சுற்றம், உயிர் என காண்கின்ற காட்சியோடும் கேட்கின்ற பாஷையோடும் பிணைப்பை உருவாக்கி "உறவுகள்" என்ற உணர்வுச்சிக்கலுக்குள் தம்மை பிணைத்து கொள்கிறார்கள். உணர்ச்சிகளின் சந்தோஷ அலை ஆர்ப்பரிக்கும் இடமாக உறவுகள் உன்னதமாகிறது. இப்படியாகவே உலகம் இயங்குகிறது.

"நிற்பதுவே
நடப்பதுவே
பறப்பதுவே
நீங்கள் எல்லாம்
சொர்ப்பனம் தானோ
பல தோற்ற
மயக்கங்களோ
கற்பதுவே கேட்பதுவே
கருதுவதே
நீங்களெல்லாம் அற்ப
மாயைகளோ
உம்முள் ஆழ்ந்த
பொருள் இல்லையோ"



பிறப்பு முதல் இறப்பு வரை சுற்றத்தாரையும் சூழலையும் சார்ந்தே மனித வாழ்வு சுழல்கின்றது. தாய் தகப்பனுடன் தொடங்கி பின் தாரத்துடன் தொடர்ந்து தனயன் வழி இறப்பை எட்டும் வரை வாழ்வின் ஒவ்வொரு படிநிலையிலும் பற்றுகோலாய் சொந்த பந்தங்கள் எனும் ஆதாரம் அவனுக்கு அத்தியாவசியமாய் இருக்கிறது.

"வீடு வரை உறவு
வீதி வரை மனைவி
காடு வரை பிள்ளை
கடைசி வரை யாரோ"

பட்டினத்தார் இன்னும் விரிவாக பாடினார்,
"அத்தமும் வாழ்வும்
அகத்துமட்டே
விழி அம்பு ஒழுக
மெத்திய மாதரும் வீதி மட்டே
விம்மி விம்மி இரு
கைத்தல மேல் வைத்தழுமை ந்தரும் சுடுகாடு மட்டே
பற்றித் தொடரும் இருவினை
புண்ணிய பாவமுமே"

தன் ஆயுட்காலம் முழுதும் சக உறவுகளிடம் சார்ந்திருப்பவன், திடீரென பற்றுள்ள உறவுகளை இழக்கும் போது, சூழ்நிலைகளின் காரணமாக அவர்களை விட்டு விலக நேரிடும் போது, வீண்வாக்குவாதங்களால் உறவுகள் முறிவடையும் போது உடைந்து போகிறான். ஆதாரமாய் பற்றிய பற்றுகோலை இழக்கின்றான்; மனதளவில் பலமற்றவனாகின்றான்; மன அழுத்தத்தில் உழல்கின்றான். சிலர் மதுவையும் புகையையும் துணைக்கு அழைக்கிறார்கள். பலருக்கு தனிமை அவசியமாகிறது.

"நினைவுகள் நெஞ்சினில்
புதைந்ததினால்
நெருப்பால் எந்தன் நெஞ்சை
சுடுகின்றேன்
உன் உருவம் கண்களிலே
பதிந்ததினால்
கண்ணீர் விட்டு கண்ணீர் விட்டு
அழிக்கின்றேன்"

வாழ்தலின் ஆதாரம் என்ன? வாழ்க்கை என்றால் என்ன? வாழ்க்கையில் எதை நாங்கள் சேமிக்கின்றோம்? எதை பெற்றுக்கொள்கிறோம்?

ரசிக்கும் சீமானே!!

இப்படி ஆயிரம் கேள்விகள் கேட்டாலும், அனைத்துக்குமே பதில் ஒன்று தான். நினைவுகள் அல்லது ஞாபகங்கள். வாழ்க்கை என்பது ஒரே சட்டத்தில் சுற்றிக்கொண்டிருக்கும் ராட்டினமில்லை. அது ஒரு புகையிரத பயணம். ஒவ்வொரு ஸ்டேசனிலும் புதிதாக மனிதர்கள் சேர்வதும் கூட பயணித்தவர்கள் இறங்கிக்கொள்வதும் அத்தோடே பயணம் தொடர்வதும் தான் வாழ்க்கை. என்றும் கூடவே வருவது நினைவுகள் மட்டும் தான்.

"அவரவர் வாழ்க்கையில்
ஆயிரம் ஆயிரம் மாற்றங்கள்
அந்த நினைவுகள் நெஞ்சினில்
திரும்பிட திரும்பிட ஏக்கங்கள்"

மகிழ்ச்சியான நினைவுகள் மயிலிறகாக எப்படி மனதை வருடி செல்கிறதோ, அதன் பல மடங்கு வலிமையோடு சோகமான நினைவுகள் மார்ப்புக்கூட்டை கடப்பாரை கொண்டு கிழிக்கும். அதை கடப்பதோ பெரிய போராட்டம். "வாழ்க்கை என்றாலே கடந்து போவது தானே!" என தத்துவம் இலகுவாக சொல்லிவிடலாம்; அதை பின்பற்ற தனிப்பலமே தேவை. இந்த ஆத்மபலத்தால் ஒவ்வொருவரும் வளர்ந்த விதம், இயல்பான சிந்தனை வீச்சு, சந்தித்த மனிதர்கள், பெற்ற அனுபவங்கள் அடிப்படையில் உறவுநிலை முறிவுகளை அணுகும் விதம் இரு வகைப்படும்.

ஒன்று,

"தனியாக தவிக்கின்றேன்
துணைவேண்டாம் அன்பே போ
பிணமாக நடக்கின்றேன்
உயிர் வேண்டாம் தூரம் போ"

தனிமையின் கொடுமையில் தத்தளித்து கரை காண முடியாமல் மூழ்கி சாகின்றவர். இது தான் உறவுகள் கசக்கும் போது ஆரம்ப நிலை. வெறுப்பு. இது வளர்ந்து தற்கொலைகளாக முடிவதும் மீண்டு புது மனிதனாக பிறப்பதும் அவரவர் மனோபலம் சார்ந்தது.

மற்றையது,

"பந்தம் என்ன சொந்தம் என்ன
போனால் என்ன வந்தால் என்ன
உறவுக்கெல்லாம் கவலைப்பட்ட
ஜென்மம் நானில்லை"

தனிமையை கொடுமையாய் இன்றி கொடையாய் எண்ணி அதிலே கதிமோட்சம் அடைபவர்கள். இது பாச பந்தங்களில் கட்டுப்பட்ட மனிதனுக்கு இலகுவாக கிடைத்துவிடாத மனநிலை. வாழ்க்கையில் அடிபட்டு, சுற்றத்தவரின் நரித்தனங்களை எல்லாம் கடந்து அனுபவித்த பின்னரே வரும் முதிர்ச்சியான மனநிலை இது.



"போனால் போகட்டும் போடா - இந்த
பூமியில் நிலையாய் வாழ்ந்தவர் யாரடா"

என்று *ALL IS WELL* - எல்லாம் நன்மைக்கே என்று நேர் எண்ணங்களோடு வாழ்க்கையை அணுகுபவர்கள். என்ன நடந்தாலும் ஒரு காரணத்துடனேயே நடக்கும் என்ற எண்ணம் வந்துவிட்டாலே வாழ்க்கை ஒளிமயமாகி பிரகாசிக்க தொடங்கிவிடும். வாழ்க்கையில் ஏற்றமோ இறக்கமோ எதற்குமே இவர்கள் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. உலகத்தை புதிய கண்ணோட்டத்தில் நோக்குபவர்கள்.

"கோவலன் காதை தன்னில் மாதவி
வந்ததுண்டு
மாதவி இல்லை என்றால் கண்ணகி ஏது
இன்று"

காரணம் இன்றி
இங்கு எந்தக்
காரியமும்
நடப்பதில்லை.



"தனிமையிலே
இனிமை காண
முடியுமா?"

பிரச்சினைகளுக்கு
ஆறுதல் தேடும்
போது உடனடியான
"தனிமை" சிந்திக்கும் வெளியை வழங்கி ஆற்றுப்படுத்தல் செய்கிறது. இதுவே தொடரும் போது உலக வாழ்வின் அர்த்தமும் இயற்கையின் படைப்பின் அழகும் விளங்க ஆரம்பிக்கிறது. நிலையான மகிழ்ச்சி ஊற்று ஊற தொடங்கும் நிலை.

"மலரிருந்தால் மணம்
இருக்கும் தனிமை இல்லை
செங்கனியிருந்தால் சுவை
இருக்கும் தனிமை இல்லை
கடல் இருந்தால் அலை
இருக்கும் தனிமை இல்லை
நாம் காணும் உலகில்
ஏதும் தனிமை இல்லை"

சக மானிடர்கள் மாத்திரமே ஒருவனின் தனிமை எனும் உணர்வை நிவர்த்திப்பவர்கள் அல்ல. உலகில் காண்கின்ற, ரசிக்கின்ற, ருசிக்கின்ற, கேட்கின்ற, முகர்கின்ற, ஸ்பரிசிக்கின்ற யாவற்றிலுமே லயிப்பவனுக்கு,

//எதிர்காணும் யாவுமே
தீண்ட தூண்டும் அழகா//

அவனோ,

//காண்கின்ற காட்சிக்குள்
நான் மூழ்கினேன்//

என சுற்றியுள்ளவற்றில் மயங்கி சுற்றத்தாரை மறந்து தனிமையிலும் இனிமை காண்பவன்.

ஆனால் இம்முதிர்வை பெறுவது அவ்வளவு எளிதன்று. வாழ்வில் பல்வேறு ஏற்றத்தாழ்வுகள், வாக்குவாதங்கள், மனக்கசப்புகள், நம்பிக்கை துரோகங்கள், அன்னியப்படுத்தல்கள் என்பவற்றை சந்தித்து களைத்தவன் இம்மாய கேளிக்கைகளை களைந்து இயற்கையோடு தன்னை ஒப்புரவாக்குகிறான்.

//கரைவந்த பிறகே
பிடிக்குது கடலை
நரை வந்த பிறகே
புரியுது உலகை//

உலகை புரிந்துகொள்கிறான். வாழ்க்கையை புதிய கண்ணோட்டத்தில் நோக்குகிறான். எதிர்காணும் யாவற்றையும் புதிதாய் தீண்டுகிறான். தன் ஆழ்மனதை அறிய முனைகிறான். இதுவரை காலமும் வீணடித்த வாழ்க்கையை வாழ ஆரம்பிக்கின்றான். புதிய தொடக்கம்! இன்றிலிருந்து அவன் ஆட்சி!

//வாழா என் வாழ்வை வாழவே
தாழாமல் மேலே போகிறேன்
தீரா உள் ஊற்றை தீண்டவே
இன்றே இங்கே மீள்கிறேன்
இங்கே இன்றே ஆழ்கிறேன்//

இப்புதிய பயணத்தில் யாவுமே புதிது. அவனுமே புதிது. அவனுக்கு பெயர், ஊர், சாதி, மதம், மொழி, தொழில், அதிகாரம், பதவி, புகழ், பணபலம் எதுவுமே இல்லை. இவன் புதியவன் . தன்னை தானே புதிதாய் பார்க்கிறான். யாராக இருக்குமென ஆராய்கிறான். இது தெளிவான தேடல்; பிறர் தாக்கம் அற்ற தெளிவான தேடல்.

//யாரோப்போல் நான்
என்னைப் பார்க்கிறேன்
ஏதும் இல்லாமலே இயல்பாய்
சுடர் போல் தெளிவாய்//

உலகை வேடிக்கை பார்க்கிறான். தன்னையும்

கூட. தேடலால் தன்னை உணர்கிறான். ஞான நிலை. இதுவரைகாலமும் அவன் பின்பற்றியது பிறரால் நிறுவப்பட்ட சமூக கட்டமைப்பினுள், பிறரால் உருவாக்கப்பட்ட கலாசார வட்டத்திற்குள், பிறரால் அளிக்கப்பட்ட சாதிய சட்டகத்திற்குள் தனக்கு முன்னிருந்தவன் செயற்படுத்திய அதே வாழ்வியல் முறையின் நகலை.

//போலே வாழ்ந்தே சலிக்கும்
வாழ்வை மறக்கிறேன்//

நகலாய் வாழ்ந்தது போதும்; நான் நானாய் வாழலாம் என தெளிகிறான்.

//நானே நானாய் இருப்பேன்
நாளில் பூராய் வசிப்பேன்//

வாழ ஆரம்பிக்கிறான்..

//காற்றோடு
வல்லூறு தான் போகுதே
பாதை இல்லாமலே அழகாய்
நிகழே அதுவாய்//

வல்லூறு என்பது பருமனில் சற்று சிறிய கழுகு இனம். பறவைகளில் மிக வேகமாக பறக்கும் ஆற்றல் வாய்ந்தது. வான் வெளியில் காற்றை விஞ்சிய வேகத்தில் பறக்க வல்லது. இருப்பினும் இரையை நோக்கிய அதன் தொடர் பயணத்தை காற்றோடு இணைந்தே அது தொடரும் . அவ்வாறே இவனும் இயற்கையோடு இணைந்தே தன் இலக்கை நோக்கி பயணிக்கிறான்.

முன் போலன்றி வெறுப்புகள், வீண் குற்றச்சாட்டுகள், வாக்குவாதங்கள், துரோகங்கள் அனைத்தையும் புறக்கணித்து சலசலப்பின்றி சாந்தமாய் முன்னேறுகிறான். அவைகள் இப்பொழுதும் இருக்கிறது. இவன் அதை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. தன்னுடைய புதிய பயணத்தில் தெளிவாக தேவையற்ற குப்பைகளை மனதுக்குள் சேர்க்காமல் நேர் கொண்ட பார்வையுடன் தொடர்கிறான் பயணத்தை.

//திமிலேறி காளை மேல் தூங்கும் காகமாய்
பூமி மீது இருப்பேன்
புவி போகும் போக்கில் கை கோர்த்து
நானும் நடப்பேன்//

இது கடந்த கால வாழ்க்கையில் கிட்டாத இன்பங்கள் யாவும் கைசேரும் நேரம்! இதுவே எதிர்கால வாழ்க்கையின் சாரம்!

//நேற்றின் இன்பங்கள் யாவும் கூடியே
இன்றை இப்போதை அர்த்தம் ஆக்குதே
இன்றின் இப்போதின் இன்பம் யாவுமே
நாளை ஓர் அர்த்தம் காட்டுமே//

நேற்று நடந்த கடந்தகால வாழ்க்கையினால் தான் இன்று இந்த நிலையில் மகிழ்வோடு இருக்கிறேன். அந்த பிரச்சினை தான் இந்த சந்தோஷத்தை தந்திருக்கிறது. என்னை மாற்றி என் சிந்தனை முறைக்கு புது இரத்தம் பாய்ச்சியிருக்கிறது. ஆக நேற்றைய பிரச்சினை கூட நன்மைக்கு தான். ALL IS WELL.

அவரவர் வாழ்க்கை அவரவர் கரங்களில் பூனைக்குட்டியாவதும் பூகம்பமாவதும் அவரவர் மனங்களில்!

எனக்கோ...

//இரு காலினிடையிலே
உரசும் பூனையாய்
வாழ்க்கை போதும் அடடா!//






தொண்டரடிப்பொடியன்

இந்த பிரபஞ்சத்தில் சர்வ வல்லமை படைத்த சக்தி ஒன்று உண்டு என்பதை ஆத்தீகர்களும் சரி, நாத்தீகர்களும் சரி, விஞ்ஞானிகளும் சரி, பகுத்தறிவுவாதிகளும் சரி ஒத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் என்ன, அதற்கு அவரவர்கள் வைத்த பெயர்கள் தான் வித்தியாசம். நான் வைத்த பெயர் அன்பு. அன்பினால் நிறைந்தது தான் உலகம். "அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்" என்கிறார் திருவள்ளுவர். "இதைச் சொல்ல நீ யார்? " என்று நீங்கள் கேட்பது கேட்கிறது. வள்ளுவன் சொன்ன அன்பும் தாழும் கொண்டவன் நான். ஆம் கதவு பேசுகிறேன். ஆலயக் கதவு பேசுகிறேன். தமிழ் நாட்டில் உள்ள ஸ்ரீ ரங்க நாதரின் ஆலயக் கதவு பேசுகிறேன்.

"அன்பைப்பற்றி அன்பன் பேசலாம், ஆண்டவன் பேசலாம், ஆலயக்கதவு நீ பேசலாமா? அதுவும் அன்பற்றவர்களைத்தான் மரம் என்போம். அந்த மரத்தாலான நீ பேசலாமா? " என்கிறார்கள் பலரில் சிலர். என்னை விட்டால் அன்பைப்பற்றி ஆழமாக யாரால் சொல்ல முடியும்? அன்பின் ஒவ்வொரு நிலையிலும் நான் இருக்கிறேன். மனக்கதவுகள் திறக்கப்படாமல் அன்பு ஆரம்பமாகாது. பின்னாளில் சில கதவுகள் தட்டப்பட வேண்டும் என்றே பூட்டப்படும். பல கதவுகள் தட்டப்படக்கூடாதென்றே பூட்டப்படும். எத்தகைய பூட்டாயினும் அன்பு தட்டும். திறக்கும் வரை முட்டும். அன்றும் அப்படித்தான் என்னை வேக வேகமாக தாழிட்டார்கள் நெற்றியில் நாமமிட்டவர்கள். வெளியே ஒரு பெண் சிங்கம் என்னைத் திறக்க ஆனைகளுக்கு ஆணையிட்டது. அன்பினால் தட்டியிருந்தால் நானே திறந்திருப்பேன். அதிகாரத்தால் ஆணையிட்டார்கள். அமைதியாக இருந்து விட்டேன். யார் அந்த பெண் சிங்கம்? என்னை ஏன் உடைக்க முயல்கிறாள்? வைணவர்கள் ஏன் என்னை இறுக தாழிட வேண்டும். மத நுரைகளுக்குள் காணாமல்ப்போன ஒரு அன்பின் கப்பச்சினோவை பருகத் தயாராகுங்கள்.

காவிரி நதியோரம் உள்ள ஸ்ரீரங்கம் வைணவர்களின் தலைமைச் செயலகம்; பூலோக வைகுண்டம். ஏழு பிரகாரங்கள், 21 கோபுரங்கள் கொண்ட பெருங்கோவில் இது.

வழமை போல திருப்பள்ளியெழுச்சி பாடி என்னை திறந்து அரங்கநாதனை துயிலெழுப்பிக்கொண்டிருந்தார்கள் தீட்சிதர்கள். திடீரென கோயில் வீதி எங்கும் மக்கள் கூட்டம் அலறியடித்து ஓடி ஒளிந்து கொண்டார்கள். குதிரைகளின் கனைச்சல் அரங்கரின் ஆலயமணியை அடக்கி வைத்தது. புரவிகளின் புழுதிப்புயலில் ஸ்ரீரங்கத்து சாம்பிராணிப்புகை இல்லாமல்ப் போனது. புயல்களுக்குள் தென்றலாய் முட்கள் சூழ ஒரு ரோஜா மலர் என்னை நோக்கி வந்து கொண்டிருந்தது. போர்வைகளால் ஆன பாவை அவள். எலும்பை சதையும், சதையை தோலும், தோலை அவள் ஆடையுமென போர்த்தியிருக்க அவளை மொத்தமாய் அரேபிய வீரர்கள் பாதுகாப்பாய் போர்த்தியிருந்தனர்.



அவசர அவசரமாக தீட்சிதர்கள் சிலர் என்னை இறுக பூட்டி ஆலயத்திற்குள்ளேயே நின்று கொண்டனர். மதத்தை ஆடை காட்டியதா, ஆடையை மதம் காட்டியதா தெரியவில்லை. ஆனால் அவள் முகமதிய நிலா என்பதை அவள் ஆடையும், அரச வம்சத்து அதிகார வர்க்க நிலா என்பதை அவள் படையணியும் எனக்கு காட்டி நின்றன. அலாவுதீன் கில்ஜியின் படைத்தளபதியான முகமது அலியின் மகள் மூன்சென் தான் வந்திருக்கும் அந்த முகமதிய அதிகார வர்க்க நிலாவாம். எனக்கு பின்னாலிருந்த தீட்சிதர்கள் இவ்வாறு பேசிக் கொண்டார்கள். ஆனால் குழப்பப்பட்ட வரலாற்றில் வேறு பெயர்களும் சொல்லப்படுகின்றன.

இந்தியா இஸ்லாமிய ஆக்கிரமிப்பாளர்கள் கைகளுக்குள் சிக்கியிருந்த காலம். வட இந்தியாவை ஆக்கிரமித்த அலாவுதீன் கில்ஜி தென் இந்தியா நோக்கி காய் நகர்த்திக் கொண்டிருந்தான். அதன் ஒரு கட்டமாகவே முகமது அலி தென்னகம் வந்திருந்தான். தென்னகமாம் தமிழகம் அலியின் மகள் மூன்சென்னுக்கு மிகவும் பிடித்துவிட்டது. தமிழரின் மரபுகள் யாருக்குத்தான் பிடிக்காது? ஊர் சுற்றிப்பார்க்க ஆசைப்பட்டாள் அந்த அரேபிய அழகி. அவளுக்கோ அது நகர் வலம். மக்களுக்கோ அது ரணகளம். பாதுகாப்பாய் அந்த பதுமையுடன் வந்தவர்களை கண்டு நகரத்தவர்கள் நடுநடுங்கி விட்டார்கள். உயர்ந்து நின்ற ஸ்ரீரங்கத்து கோபுரங்களை பிரமிப்போடு பார்த்தாள் மூன்சென். எத்தனை கலையம்சம் பொருந்திய சிலைகள். அத்தனையும் ஒன்றன் மீது ஒன்றாய் அடுக்கி, வானை முட்டும் உயரத்தில் கட்டடங்கள்.

"என்ன இது?" கேட்டாள் மூன்சென். "இந்துக்களின் பள்ளிவாசலின் முகப்பு" பதிலளித்தான் படைவீரன்.

முகப்பே வியப்பாய் இருக்கிறதே, உள்ளே மலைப்பாய் அல்லவா இருக்குமென்றுதான் இந்த இஸ்லாமிய பைங்கிளி உள்ளே செல்ல ஆசைப்பட்டு எனை நோக்கி வந்திருக்கிறாள். நோக்கியவளின் நோக்கம் தீட்சிதர்களுக்கு தெரிய வாய்ப்பில்லையே. படை கொண்டு வந்தவளால் பரந்தாமனுக்கும், தமக்கும் ஆபத்தென்றே கதவடைத்து காத்து நின்றனர். ஆசையோடு வந்தவள் ஆத்திரம் கொண்டாள். கலை நிறைந்த கண்களில் கனல் நிறைந்தது. தன் ஆசைப்பயணத்திற்கு தடையாகிப்போன என்னை தகர்க்க ஆனைகளுக்கு ஆணையிட்டாள். சில குதிரைகள் சென்று யானைகளை அழைத்து வந்தன.

பாடல்களுக்கே திறந்து பழக்கப்பட்டவன் நான். படை கொண்டு பலம் காட்டி திறக்க வருகிறார்கள். ஆலயக் கதவு தான். ஆனால் ஆனையின் மொத்தலை தாங்குவேனா? ஆதிசேசனில் பள்ளி கொள்ளும் ரங்கா! நீ தான் என்னை காப்பாற்ற வேண்டுமென்று வேண்டினேன். தன் நீண்ட தந்தங்களை மேலும் நீட்டியவாறே ஓடி வந்தது ஒரு யானை. நெருங்கி விட்டது யானை.



திடீரென ஒரு குரல்... "வேழமே நில்" நின்றது வேழம்.

காப்பாற்றப்பட்டேன். காப்பாற்றியவர் கடவுள் தான். நம்மவர்கள் எல்லோரும் நம்பும் ராமானுஜர். மகானின் சொற்கள் மனிதர்களுக்குத்தான் புரியாது; விலங்குகளுக்கு புரியும். நின்றது வேழம். அதிர்ந்து விட்டாள் மூன்சென். ஆச்சரியத்தோடு ராமானுஜரை பார்த்தாள். அவள் பார்வையிலேயே அவள் நோக்கத்தை அறிந்து கொண்டார் ராமானுஜர். "அரங்கனை காண வந்தவர்களை கதவடைத்தா வரவைற்பீர்கள்? அடையா நெடுங்கதவு அரங்கனுடையது. கலை காண வந்தவர்களை கவலையுடனா அனுப்புவது?" என்று ஆலயக்கதவுகளை திறக்க வைத்த ராமானுஜர் ஆன்மீக முறைப்படி அவர்களை உள்ளே செல்ல வழியமைத்தார்.


Nayaritha
நயனி

மாற்றான் மதமென்றாலும் மசூதிக்குள் செல்வது போல பண்புடனேயே உள் நுழைந்தாள் மூன்சென். கதவடைத்ததால் வந்த கோபம் கதவு திறந்ததும் காணாமல் போய்விட்டது. இதனால்தான் கதவுகள் அன்பின் அடுத்த நிலையை தீர்மானிப்பவை என்று ஆரம்பத்திலேயே சொன்னேன்.

கோபுரத்தை பார்த்தே பிரமித்தவள், கோயிலினுள்ளே காணும் திசையெல்லாம் வைத்த கண்ணை எடுக்க முடியாமல் விழி செருகி, உயிர் உருகி நின்றாள். உருவ வழிபாட்டை ஏற்காத மார்க்கத்தை ஏற்றிருந்தவளுக்கு உருவங்களை ஏற்ற மார்க்கம் புதுமையாய் இருந்தது. மெல்ல மெல்ல முன்னேறிச் சென்றவள் ஓர் இடத்தில் முன்னேற முடியாமல் முகாமிட்டு விட்டாள். சிலை ரசிக்க வந்தவளை சிலையாக்கியதும் ஒரு சிலைதான். மூலவராய் சங்கு சக்கரதாரியாக வீற்றிருக்கும் அரங்கனுடைய சிலையில் லயித்துப்போனாள். முதன்முறையாக அப்போதுதான் பார்த்தாள். எப்போதுமே பார்த்திருக்க வேண்டிய உருவமென்று எண்ணிக்கொண்டாள். நகர் வலம் வந்தவள் நகராமல் நிலை கொண்டதால் உடன் வந்தவர்கள் பயம் கொண்டவர்களானார்கள்.

மூன்சென் நிலை முகமது அலிக்கு தெரிவிக்கப்பட்டது. "ஆக்கிரமிப்பாளரின் மத கலாச்சாரங்களைத்தான் அடிமைகள் பின்பற்ற வேண்டும். அடிமைகள் மதத்தை என் மகள் பின்பற்றினால் அதை விடவும் அவமானம் ஏது? ஆள வந்தவர்கள் ஆராதனை செய்வதாய் அலாவுதீன் சுல்தான் அறிந்தால் மறுநொடி சிரச்சேதமல்லவா! " ஆழமாய் சிந்தித்தான் அலி. அவசர உத்தரவுகள் பிறப்பித்தான். பலவந்தமாக ஆலயத்திலிருந்து வெளியேற்றப்பட்டாள் மூன்சென். கண்களுக்குள் அகப்பட்ட அந்த கார்மேக வண்ணனின் உருவை மனத்திரையில் வரைந்து கொண்டாள். ஆனால் அது அவளுக்கு போதுமானதாக இல்லை. அந்த உணர்வை மனதின் வழி மனதிற்குள் நுழைய வைக்க அவள் தயாரில்லை. கண்ணனை கண்டது கண்ணின் வழி. கண்ணின் வழியாகவே கண்ணனை கண்டு களித்து அதில் திளைத்திருக்கவே அவள் மனம் விரும்பியது. மகளின் நிலை மோசமாவதாய் உணர்ந்த அலி அவளை இரவோடு இரவாக டில்லிக்கு அனுப்பி வைக்க முடிவு செய்தான்.

அன்புக்கு மதங்கள் தெரியாது, மார்க்கம் தெரியாது, இனங்கள் தெரியாது. அன்புக்கு தெரிந்ததெல்லாம் அன்பு மட்டும் தான். அன்பு கட்டுப்படுவதும் அன்புக்கு மட்டும் தான். அலியின் திட்டத்தை அன்பின் திட்டம் மாற்றியது. டில்லி நோக்கி புறப்பட்ட பல்லாக்கு ஸ்ரீரங்கம் கோயிலுக்கு திருப்பப்பட்டது. ஆலயம் வந்தாள். ஆலயத்திற்குள் வந்தாள். களவாக வந்தாலும், காதலோடு வந்ததால் நான் ஊமையாகி செவிடாகி குருடாகி முடமாகிப் போனேன். அரங்கனை கண்டாள். கண்களால் கைது செய்தாள். பிரதிஷ்டை செய்யப்பட்ட அரங்கனின் விக்கிரகத்தை அடியோடு கிளப்பினாள். ஆசையோடு தழுவினாள். பல்லாக்கில் ஏற்றினாள். அவனருள் இன்றி அணுவும் அசையாதென்பதால் ஸ்ரீரங்கம் விட்டு டில்லி செல்ல அரங்கனும் மனம் அமைத்திருந்தான் போலும். மாசற்ற அன்பை மதக் கடவுளே ஏற்கிறார். மனிதர்கள்?

மூன்சென்னோடு டில்லியை அடைந்தார் அரங்கர்.

ஸ்ரீரங்கத்துக்காரை டில்லி ஏற்றதா?

அரங்கரற்ற அரங்கான ஸ்ரீரங்கம் என்ன ஆனது?

கடத்தல்க்காரியான காதல்க்காரி மூன்சென் அன்பு என்ன ஆனது?

அடுத்த இதழில் சொல்கிறேன். அதுவரை தாழிட்டுக் கொள்கிறேன்.



இப்படிக்கு,
ஆலயக்கதவு
(ஸ்ரீரங்கம்)

# வைத்தியன் உறுப்புக்கள்

முன்னய காலங்களில் குரு சீட கல்வி முறையிலயே(குருகுலக்கல்வி) மருத்துவம் கற்பிக்கப்பட்டது. அந்த வகையில் குருவினால் சீடர்களுக்கு சில சூட்சுமங்கள் சொல்லிக்கொடுக்கப்படும். குரு விடுகதைபோல் கேள்வி கேட்க சீடர்களும் அதற்கு பதில் அளிக்க வேண்டும். அவ்வாறு கேட்கப்படும் விடுகதை போன்ற ஒரு பாடல் இது. இப் பாடலில் வைத்தியன் ஒருவரின் உறுப்புக்கள் என்னவென்று சூட்சுமமாக குருவினால் கேட்கப்பட்டுள்ளது. அதற்கு பதிலும் பாடல் மூலம் வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறு மனிதனுக்கு உடல் உறுப்புக்கள் முக்கியமோ அதே போன்று ஒரு வைத்தியனுக்கும் வைத்திய உறுப்புக்கள் முக்கியமாகும். இவ் உறுப்புக்களை நன்கு அறிந்தவனே சிறந்த வைத்தியன் ஆகின்றான்.

விடுகதை போல் கேட்கப்படும் பாடல் இது...

"அச்சமில்லாதிருக்கு மாயுறு வைத்தியோர்க்கு...
வச்சகண் மூன்று
நாலுதலை
வளர்முகந்தானைந்து..
துச்சறுமறுகை
யெட்டுச் சரீரங்கால்
பத்துச் சொன்னார்...
நிச்சயமீதறிந்து கொள்வது
நெறியதாமே"..

-அங்காதிபாதம்-

N.ஹரிசாந்.

பொருள் - ஒரு வைத்தியனுக்கு கண்கள் மூன்று, தலைகள் நாலு, முகங்கள் ஐந்து, கைகள் ஆறு, உடல்கள் எட்டு, கால்கள் பத்து, என்று சொன்னார்கள் இவற்றை அறிந்து கொள்வது முறையாகும்.

இக் கேள்விக்கான பதில் பாட்டு...

"நெறிகுணம் மருந்து சுத்திமூன்றும் நேத்திரமதாகும்..
பிறிவறுவாத பித்த சேற்பதொந்த மின்னான்கும்...
அறிதருசிரமாம் நாடி ஐந்துமே முகமதாகும்..
குறிதருசுவைகளாறும் கூறினார்கையதாமே"..

"கைய்முதலட்டதானப் பரீட்சைதான் காயமெட்டாம்..
உய்யுறு நாடிபத்துக்காலென வேதினார்கள்..
செய்யுறு வைத்தியன் பேர்நந்தியத் தேவனாகும்..
வெய்யரோகியின் பேர்ராகு வுரைகல் விறுமனாமே"..

-அங்காதிபாதம்-

பொருள் - மருந்துக்களின் விதங்கள், அவற்றின் குணங்கள், அவற்றின் கெட்ட குணங்களை அகற்றும் முறைகளை அறிந்திருப்பது வைத்தியனுக்குரிய மூன்று கண்களாகும். ஒன்றாயிருக்கின்ற வாத, பித்த, சிலேற்பன, தொந்தம் ஆகிய நான்கையும் அறிந்திருப்பது நான்கு தலைகளாகும், பூதங்கள் ஐந்தையும் அறிந்திருப்பது ஐந்து முகங்களாகும். சுவைகள் ஆறையும் அறிந்திருப்பது கைகளாகும் என்பதாகும். கை பார்த்தல் முதலிய அட்டவதானச் சோதனைகளையுமறிந்திருப்பது உடம்பு எட்டாகும். நாடிகள் பத்தையும் அறிந்திருப்பது பத்துக் கால்கள் ஆகும். வைத்திய பரிபாசையில் வைத்தியனுடைய பெயர் நந்தியத்தேவனென்றும், நோயாளியின் பெயர் ராகுவென்றும், மருந்தரைக்கும் கல்லின் பெயர் விறுமனென்றும் சொல்வார்கள் என்பதாகும்.




இவ்வாறு வைத்தியனின் உறுப்புகள் என்று கூறப்பட்டுள்ளவற்றை உண்மையில் ஒரு வைத்தியன் அறிந்திருக்க வேண்டும். இதில் இன்னுமொரு ஆச்சரியம் என்னவெனில் இப்பாடல்கள் மிகவும் எளிமையான தமிழ் வடிவில் மிகவும் நேர்த்தியாக அமைக்கப்பட்டுள்ளன.

# மொசாட்
## என்னும் தனிக்காட்டு ராஜா


எந்தவொரு நாட்டை எடுத்துக்கொண்டாலும் தன்னை நிர்வகிப்பதோடு மட்டும் நில்லாமல் 'பக்கத்து நாட்டுக்காரன் என்ன செய்றான் என்டு பார்க்காட்டி தூக்கமே வராது. இல்லாட்டி நிம்மதியா தூங்கமுடியாது என்டலாம்'. ஆக ஒரு நாட்டைப் பொறுத்தமட்டில் உளவுத்துறை என்பது இன்றியமையாத ஒன்றுதான். 'அதனால்தான் அமெரிக்கா போன்ற மீசை முறுக்கிய ஆசாமிகள் எல்லாம் CIA FBI என்டு உள்ள வெளியனு மங்காத்தா விளையாடிக்கொண்டு இருக்காங்க'.ஆனால் அவர்களுடைய உளவுத்துறையின் மீசையில் மண்ணொட்டிய கதைக்கு இரட்டை கோபுர தாக்குதலே சாட்சி.இவ்வாறு எந்த உளவுத்துறையை எடுத்துக் கொண்டாலும் தன்னுடைய நாட்டுக்குள் சோடை போன ஏதோ ஒரு தாக்குதலோ குண்டுவெடிப்போ நிச்சயமாக இருக்கும்.'ஆனா அந்த லிஸ்ட்ல ஒருத்தனோட பெயர் மட்டும் இருக்காது. அது தான் 'மொஸாட்'. இஸ்ரேல் இன்றும் தனிக்காட்டு ராஜாவாக வலம் வருவதற்கு வழி நெடுகிலும் சிவப்பு கம்பளம் விரித்து கொடுக்கின்ற இஸ்ரேலுடைய உளவுத்துறை.'மொஸாட் இருக்கும் வரைக்கும் இஸ்ரேலுக்குள்ள குண்டு வெடிப்பென்ன குண்டூசியை கூட விழுத்தமுடியாது'. இவ்வளவு வல்லமைப்படைத்த அந்த அமைப்பைப் பற்றி எழுதுவதற்கு தூண்டுதலாய் அமைந்தது என்.சொக்கன் எழுதிய புத்தகமான 'மொஸாட்'. புத்தகம் என்பதை விட அதைத் திரைப்படம் என்றுதான் கூற வேண்டும். 'மொஸாட்டினுடைய அனைத்து சாகசத்தையும் எழுத வெளிக்கிட்டால் 'துமி' தன் நூற்றாண்டு விழாவை எட்டிடும் என்டதால ஓரிரு சம்பவங்கள் பற்றி அலச இவ்வார 'மறுபக்கத்திற்குள்' நுழைவோம்.

**மறுபக்கம்**
**கோபிகை**

ஹிட்லர் கையில் சிக்கித்தவித்த யூதர்களை பாலஸ்தீனத்திற்கு கரைச்சேர்க்கும் ஓடமாக 'மொஸாட் வி அலியா பெட்' என்ற பெயரில் உருவான அமைப்புத்தான் பின்னாளில் இஸ்ரேலின் உளவுத்துறையாக மாறியது. இந்தப் பலம் பொருந்திய அமைப்பால் தான் 'தம்மாத்துண்டு சைஸ்ல இருந்துக்கொண்டு சவூதி அரேபியா,ஈரான்,ஈராக்,சிரியா ,ஜோர்டான் ,துருக்கி ,எகிப்து, லிபியானு சுத்தி வளைச்சிருக்க அத்தனை தடியனுகள் ரவுண்டு கட்டிருந்தாலும் கால்மேல கால் போட்டுக்கொண்டு ராஜா மாறி இருக்க முடியுது'. இந்த சுள்ளான் செஞ்ச சம்பவங்கள் பல. குறிப்பாக யூதர்கள்அன்று வதை முகாம்களில் அடோல்ப் ஹிட்லரை எந்தளவுக்கு வசை பாடினார்களோ அதேயளவுக்கு அடோல்ப் ஜாக்மென்னையும் வசைபாடினார்கள். அந்தளவுக்கு வதைமுகாம்களில் யூதர்களுக்கு அவர் விளைத்த கொடுமைகள் பல. 'எப்பிடியோ மனுசன் Escape ஆயி ஆர்ஜேண்டினால பல வருஷம் நிம்மதியா மகனோட வாழ்ந்திட்டு இருக்கக்குல உசிரோட இருக்க விஷயம் மொசாட்டுக்கு தெரிஞ்சிட்டு'. அவ்வளவுத்தான் அத்தனை யூதர்களை கொன்றொழித்த மாபாவியை யூதர்களின் முதுகெலும்பான மொசாட் விட்டு வைக்குமா? நிச்சயம் இல்லை அதற்காக சிங்கம் 2 படத்தில வாற மாறி அவ்வளவு எளிதாக வெளிநாட்டுக்குச்சென்று ஒருவரை கைதுசெய்யமுடியாது. சர்வேதச அளவிலான இடியாப்பச்சிக்கல்கள் ஏராளாம். 'ஆனா படத்தில ரீல் விட்டத ரியலா தன்னுடைய தியேட்டரில் ஓட்டிக்காட்டியது மொசாட்' .ஆம், ஆர்ஜென்டினாக்கேச் சென்று ஜாக்மனை கள்ளக்களவாக நாடுகடத்தி கைதுச்செய்தது. இதனை இரண்டு நாள் கழிந்து இஸ்ரேல் பிரதமர் அறிவிக்க அர்ஜென்டினா அரசாங்கம் கொதித்தெழுந்து

"இது மனித உரிமை மீறல், எங்கள் எல்லைக்குள் நுழைந்து ஒருவரைக்கடத்தியது சட்ட விரோதமானது மரியாதையாக திருப்பி ஒப்படைத்து விடுங்கள்" என்றது. அதற்கு இஸ்ரேல் அரசாங்கமோ மறுத்துவிட்டது. முறைப்படி நீதிமன்றத்தில் விசாரித்து நாங்களே தண்டனை வழங்குவோம் என்று கூறியது அதன்படியே வழக்கை விசாரித்து மரணதண்டனையும் வழங்கியது. இந்த சம்பவத்திற்கு பின்னர் மொசாட்டின் பெருமை பலமடங்கு உயர்ந்த அதேவேளை ஏனைய நாடுகள் மொசாட் தன் வீட்டேக்குள்ளேயும் பாய வெகுநேரம் எடுக்காது என சுதாகரித்துத் கொண்டன. ஆனால் அதற்கு முன்பே உலகெங்கிலும் மொசாட் மதில் பாய்ந்துவிட்டது.

மொசாட்டினுடைய முக்கிய சம்பவங்களுள் ஒன்று Black September தொடர்பானது. ஜேர்மனிக்கும் யூதர்களுக்கும் எட்டாப்பொருத் தமோ என்னவோ. யூதர்களுடைய ரத்தம் அதிகம் கசிவது ஜேர்மனியில்தா ன். ஆம் 1972 செப்டம்பர் 5 ஜெர்மனியின் மியூனிக் நகரில் அமைக்கப்பட்ட ஒலிம்பிக் கிராமத்தின் வீட்டொன்றினுள் நுழைந்த பாலஸ்தீன போராளிகள் இஸ்ரேலிய வீரர்கள் இருவரைச்சுட்டு அந்த வீட்டைத்தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தவுடன் 9 இஸ்ரேலிய வீரர்களை பணய கைதிகளாக வைத்து சிறையிலிருக்கும் தங்களுடைய பாலஸ்தீன விடுதலை போராளிகளை விடுவிக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்தது. இஸ்ரேலிய அரசாங்கமோ எட்டுப்போராளிகள் மிரட்டுவதற்காக இருநூறுக்கும் அதிகமான கைதிகளை விடுவிப்பதா என்று தயங்கியது. உடனடியாக மீட்பு படையை ஜேர்மனிக்கு அனுப்ப தயாரானது. உடனே ஜேர்மனோ 'சாரி சேர் வெளியாக்கள் எங்க ஏரியாக்கு Weapons ஓட வர Allow பண்ணமாட்டம் எதுவா இருந்தாலும் பேசித் தீர்த்துக்குங்க' என்றது. இஸ்ரேலுக்கோ பதில் விரக்தியை தந்தாலும் வேறு வழியின்றி சம்மதித்தது. போராளிகள் தப்பிச்செல்வதற்கு தங்களுக்கு விமானம் தேவையெனக்கூற அதற்கு சம்மதித்தது அதுவும் விமான நிலையத்தில் வைத்து மடக்கிபிடித்துவிடலாம் என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான். ஆனால் ஜோர்மனியப்படைகளின் அசட்டுத்தனத்தினால் இதனைப் புரிந்துக்கொண்ட போராளிகள் பணயக்கைதிகளை விமான நிலையத்தில் உடனே சுட்டுவீழ்த்தியது. பதிலுக்கு நடந்த தாக்குதலில் 5 போராளிகள் பலியாக மூன்று பேரை உயிருடன் பிடித்தது. ஆனால் இவர்கள் அனைவரும் வெறுமனே அம்புகள் என்பது மொசாட்டுக்கு நன்றாகவே தெரியும்.



இவர்களுக்கு பின்னால் யார் எய்தவனாக இருந்தாலும் சரி , எத்தனை பேர் எய்தவர்களாக இருந்தாலும் சரி அத்தனை பேரையும் விளையாட்டு வீரர்களுடைய ஆத்மா சாந்தியடைவதற்காக தீர்த்துக்கட்ட திட்டமிட்டது. அதன்படி கச்சிதமாக காய் நகர்த்தி ரோம் பாரிஸ் என்று பொதுவான இடங்களிலும் சரி பாலஸ்தீன போராளிகளின் கோட்டையான லெபனானிலும் சரி எங்கும் இலகுவாக நுழைந்து அங்கே அவர்களைத் தீர்த்துகட்டி விளையாட்டு வீரர்களின் வீடுகளிற்கு இச்செய்தியை தபாலில் அனுப்பியது. 'பொங்கும் இளமை' என்று பெயர் சூட்டப்பட்ட இத்திட்டத்தின் கீழ் 'இது தான் சான்ஸ் என்டு தனக்கு வேண்டாதவர்கள் எல்லாரையும் மொசாட் போட்டுத்தள்ளியது'

ஆரம்பத்தில் அமாவாசை மாறி CIA என்ற மணிவண்ணனுக்கு கட்டுப்பட்டு இருந்த மொசாட் நாகராஜசோழனாக காலுக்கு மேல்

கால் போடும் காலம் வந்துது. ஆம் ரஷ்யா தன்னை இரும்புத்திரைக்குள் மூடிக்கொண்ட பின்பு அமெரிக்கா ரஷ்யா பனிப்போர் மீண்டும் சூடுபிடித்திருந்துது. இந்த பனிப்போர் நிலவில் மனிதன் கால்பதிக்கும் அளவிற்கு வரையறை ஏதுமின்றி வளர்ந்துக்கொண்டே போனது அனைவரும் அறிந்த விடயமே. அப்போதுதான் ரஷ்ய விஞ்ஞானிகள் மிக்-21 என்கின்ற அதி நவீனப் போர்விமானத்தைக் கண்டுப்பிடிக்கின்றார்கள். அதனை மிக மிக கவனமாக தன்னுடைய தோழமை நாடுகள் 'சுத்தி வளைக்காம சொல்றது என்டா அமெரிக்காவினுடைய எதிரிகளுக்கு' மட்டுமே விநியோகித்து வந்தது. 'எப்பிடியாச்சும் மிக் 21 ல என்ன சமச்சாரம் இருக்கு என்டு நாம போஸ்ட்மாட்டம் செஞ்சே ஆவனும் இல்லாட்டி நமக்கு தான் ரிஸ்க்' என்டு CIA பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டாலும் ஈற்றில் அவை அனைத்தும் தோல்விப்பாதைக்கே வழிவகுத்தது. ஆட்டம் சூடு பிடித்திருந்த இந்த வேளையில் மியர் அமித் மொசாட்டின் தலைவராக பொறுப்பெடுத்தார். அந்த சமயம் இஸ்ரேலை சுத்தியிருக்க எல்லா நாடுகளிடமும் மிக் 21 இருக்க அதைப்பற்றி அறிய வேண்டிய கடமையும் பொறுப்பும் மொசாட்டிற்கு வந்துது. உடனே மொசாட் தலைவர்



இப்பொறுப்பை அதிகாரிகளுக்கு கொடுக்க, அங்கத்தவர்களே பயந்தார்கள். அமெரிக்காவாலேயே முடியாத விஷயத்தை நம்ம ஆக்களால செய்ய முடியுமா என்டு. அப்போதுதான் ஈராக் இராணுவத்தில் இருந்த முனிருக்கு இராணுவத்தின் மீது வெறுப்பு விருட்சமடைவதை மொசாட் மோப்பம் பிடித்தது. மிக் 21 ஐ எல்லா இராணுவ அதிகாரிகளும் ஓடுவதற்கு அனுமதி இல்லை. அந்த அனுமதி இருந்த ஒரு சிலருள் முனீரும் ஒருவர். அப்றம் என்ன, மொசாட் காட்டில மழைதான். ஈராக்கிலிருந்து இஸ்ரேலுக்கு ரேடர்களைக் குழப்பி மிக் 21 ஐ கடத்துவதற்கு கச்சிதமாக



ஸ்கெட்சை கீறி முனீர் கையில் கொடுத்தது இஸ்ரேல். அடுத்த வாரத்தில் வழமை போல மிக் 21 ஐ எடுத்து வான்வெளியில் புறப்பட்ட முனீரின் பாதை மாறுவதைப் பார்த்த எகிப்திய அதிகாரிகள் "என்ன சாரே பாதை மாறுது திரும்பி வாங்கோ" என்று சொல்ல முனீரின் பதிலோ "Tata Bye Bye". அப்புறம் என்ன மொசாட்டினுடைய வீடு தேடி வந்த அமெரிக்காவை "வாடி ராசாத்தி" என்று வரவேற்றது இஸ்ரேல். ஆனால் மிக் 21 ஐ கேட்டவுடன் கொடுத்துவிடவில்லை முதலில் தான் பார்ட் பார்ட்டாக பிரித்து மேய்ந்து தன்னுடைய ஆராய்ச்சிகள் அனைத்தையும் முடித்து மிகப்பெரிய பேரம் பேசலினின் பின்னரே ஒப்படைத்தது. அதன் மூலம் அமெரிக்காவிடமிருந்து நவீனரக போர் விமானங்களைப் பெற்று இஸ்ரேலுடைய விமான படைப்பலத்தை அதிகரித்து இரட்டை இலாபத்தைப் பெற்றுக்கொண்டது.

இச்சம்பவத்தின் பின் மொசாட் உலகிற்கு உரைத்த விடயம்

"நாம யாரு என்டது முக்கியம் இல்ல நம்மலால என்ன முடியும் என்டதான் முக்கியம்"

# என் இதயம் எழுதும் சொல் 7




ஆதியின் கம்பனியின் ஆண்டு விழா நெருங்கிக் கொண்டு இருந்தது. அனைத்து வேலைகளும் விரைவாக நடைபெற்றுக்கொண்டு இருந்ததால் அலுவலகத்தில் எவருக்குமே ஆற அமர்ந்து கதைக்க கூட நேரம் இருக்கவில்லை. மீட்டிங் ஓட்டம் மீட்டிங் இவ்வாறே நாட்கள் போய்க்கொண்டு இருந்தது. அன்றும் அதுசம்பந்தமான மீட்டிங் ஒன்றை ஆதி ஒழுங்கு செய்து இருந்தான். அலுவலகத்தைல் வேலை செய்யும் அனைவரையும் அவர்களது கட்டடத்தில் கடைசித் தளத்தில் அமைந்துள்ள ஹாலிற்கு வரசொல்லி ஆணையிட்டு இருந்தான்.

ப்ரத்தியுஷா இப்பொழுதெல்லாம் நன்றாகவே வேலையை பழகியிருந்தாலும் ஆதிக்கு இன்னும் ஆராதனா தான் வேண்டும். முதலில் அவளை அழைத்து வேலையைக் கூறி முடித்த பின்னர் தான் அவள் அலுவலகத்தை விட்டு செல்லப்போகிறாள் என்றே அவனுக்கு ஞாபகம் வரும். அன்றைய கூட்டமும் ஆராதனாவின் மேற்பார்வையிலேயே நடைபெற்றுக் கொண்டு இருந்தது.

அனைவருக்கும் சிற்றுண்டிகள் பரிமாறப்பட்டு அனைவரையும் ஒழுங்காக அமர வைத்து முடியவும் ஆதி வரவும் சரியாக இருந்தது. விரைந்து வந்து அனைவருக்கும் வணக்கம் தெரிவித்தவன் அனைவரிடம் இருந்தும் புதுவித நிகழ்ச்சிக்கான யோசனைகளை எதிர்பார்ப்பதாகவும் சிறந்த நிகழ்ச்சிக்கான யோசனையை வழங்குபவருக்கு தகுந்த சன்மானம் உண்டு என்று தெரிவித்தது தான் தாமதம் அனைவரினதும் கைதட்டல்களில் அரங்கமே அதிர்ந்தது. ஆராதனாவே ஆஆ என்று தான் ஆதியை நோக்கிக் கொண்டு இருந்தாள்.

வேலை மட்டும் தான் ஆதியின் கண்ணில் தெரியும். இவ்வாறான விடயங்களை அதிகம் கையாள்வது ஆராதனாவோ ப்ரதீப்பாகவோ தான் இருக்கும்.

மேலும் இப்பொழுது அனைவருக்கும் தாள்கள் மற்றும் பேனை வழங்கப்படும் என்று கூறியவன் அங்கு வைக்கப்பட்டு இருந்த அழகிய கண்ணாடிப் பெட்டியைக் காட்டி அனைவரது யோசனைகளையும் அதனுள் இடுமாறும் இன்று மாலையே சிறந்த யோசனைகள் தெரிவு செய்யப்படும் என்று கூறிவிட்டு நன்றியுடன் முடித்துக் கொண்டவன் ஆராதனா ப்ரதீப் ப்ரத்தியுஷாவை தன்னுடன் வருமாறு விறுவிறுவென அரங்கத்தில் இருந்து வெளியேறினான்.

ஆதி வெளியேறியதுமே அனைவரினதும் யோசனைகளால் அந்தப் பெட்டி நிரம்பி வழிந்தது. பின் அதனை ஆதியின் அறைக்கு பொறுப்பானவர்கள் எடுத்து சென்று வைத்தனர். அதன் பின்னர் ஆராதனா மற்றும் ப்ரத்தியுஷா ஒவ்வொருவரின் யோசனைகளை வாசிக்க ஆதி மற்றும் ப்ரதீப்பினால் அவற்றிற்கு பின்னூட்டங்கள் வழங்கப்பட்டுக் கொண்டு இருந்தது. அதில் இளைய தலைமுறையை சேர்ந்த பிரபல எழுத்தாளர் ஒருவரின் புதிய நாவல் ஒன்றை வெளியிட வேண்டும் என்றும் அப்பொழுது அவரின் ரசிகர்களினது பார்வைகளும் நம்மீது விழும் என்று கூறப்பட்டு இருந்த யோசனையை ஆதி ப்ரதீப் இருவருமே பாராட்டினார்கள். கதாநாயகிகள் கதாநாயகர்கள் என்று அழைக்கும் முறையில் இருந்து சற்று வேறுபட்ட யோசனை. நாடியை தடவியவாறு யோசித்த ஆதி

"ஹ்ம்ம்! ஆராதனா, நீங்களே ஒரு நல்ல ஆசிரியரை தேர்ந்து எடுத்துடுங்க! எவ்வளவு செலவானாலும் பரவாயில்ல!"

என்று கூறிவிட்டு ப்ரதீப்புடன் வெளியேறவும் இரு பெண்களும் ஆரவாரமாக கை தட்டிக் கொண்டனர். இருவருமே இளைய எழுத்தாளரான யவ்வனனின் தீவிர ரசிகைகள். ப்ரத்தியுஷாவும் ஆராதனாவும் சீக்கிரமாகவே நெருங்க காரணம் அவனின் எழுத்துக்களால் என்றும் கூறலாம். இந்த யோசனை வந்த உடனேயே இரு பெண்களின் சங்கேதமாய் சந்தித்துக் கொண்டதை ஆதியும் நோக்கியதாலேயே ஆராதனாவிற்கு அந்தப் பொறுப்பைக் கொடுத்தான்.

"பார்க்கலாம் எவன் அவன் என்று"

எண்ணிச் சிரித்தவாறே வெளியேறினான்.

யவ்வனனால் தனது வாழ்வின் திசையே மாறப்போவதை அறியாமல் ஆராதனாவும் ஆர்வமாக அவனைத் தொடர்பு கொள்ளும் வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டு இருந்தாள். அன்று ஆராதனாவிடம் நிகழ்வுகள் பற்றிக் கலந்துரையாடிக் கொண்டு இருந்த ஆதி ஒரு தொலைபேசி அழைப்பு வரவும் எழுந்து செல்லபோகவும் மேசையின் காலில் அவனது கால் தட்டுப்படவும்

"அம்மா"

என்றவாறே காலைப் பிடித்தபடி அமர்ந்து விட்டான். அவனின் அலறலில் பயந்து போன ஆராதனா அவனை

"வாங்க சார்"

என்று சோபாவில் அமர்த்தி காலை பரிசோதிக்கவும் அவ்வளவு வலியிலும் காலை தன் பக்கம் இழுக்க முயன்றான்.

அவன் இழுக்கவும் தயங்கியபடி அவனது முகத்தை நோக்கிய ஆராதனா முகமெல்லாம் சிவந்து உதட்டைக் கடித்தபடி இருந்தவனைக் கண்டபின்னர் அந்த நொடி தயக்கத்தையும் தகர்த்துவிட்டு அவனது காலணியைக் கழற்றி காலுறையையும் கழற்றியவள் அவனது காலைப் பார்த்து அதிர்ந்து போய் அப்படியே அமர்ந்து கொண்டாள்.

அவளின் அதிர்வைப்பார்த்து வலியைக் கூட பொருட்படுத்தாமல் ஆராதனாவை வெளியே போகுமாறு கைகாட்டியவன் அப்படியே சோபாவில் சரிந்தான். திகைப்பு மாறாமல் அப்படியே ப்ரதீப்பின் அலுவலக அறைக்கு விரைந்து சென்ற ஆராதனா கதைவைத் திறந்த வேகத்தில் ப்ரதீப்பே ஒரு கணம் ஆடித்தான் போனான்.

"என்ன ஆராதனா? எதாவது பிரச்சனையா?"

என்றபடி ப்ரத்தீப் எழுந்து வரவும்

"ப்ரதீப் சார்! ஆதி சார்ட காலல என்னது? அப்பிடியே தழும்பா எதுவோ கட்டி வந்த தடம் போல இருந்திச்சு?"

"ஆஹ்! அதுக்கேன்மா நீ இவ்வளோ டென்ஷன் ஆகுற? அது அவனுக்கு இருக்கிறது. ஒரு தடவை பார்த்து இருக்கேன். எப்போவும் ஷூ தான் போடுவான். கேட்டப்போ எதுவுமே சொல்லல"

என்றவுடன் தீவிரமாக யோசித்தவள்

"ஆதி.. ஆதி சாரை சின்ன வயசுல யாராச்சும் கடத்துனாங்களா?"

என்றவளை விநோதமாக பார்த்த ப்ரதீப்

"அவனை இல்லை! அவனோட அண்ணா ஷ்யாமை தான் கடத்துனாங்க"

என்று கூறியதும் அன்றைய இரண்டாம் கட்ட அதிர்ச்சியை சந்தித்தாள் ஆராதனா!

**மர்மம் விலகும்...**

# குடாநாட்டின் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கான உபாயமுறைகள் 4

அதிரன்

## சமய முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள்

இலங்கையில் வரலாற்றுக்குப் பெயர்பெற்ற யாழ்ப்பாண மண்ணானது, இயற்கை கொடைகள், வரலாற்று சின்னங்கள், பிரசித்தி பெற்ற ஆலயங்கள் என தன்னுள் பல சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளது. கடந்த 30 ஆண்டு காலமாக நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தில் பல தொன்மையான சின்னங்கள் அழிந்து போனாலும், ஆங்காங்கே சிலவற்றை இன்னமும் இறுக்கப்பிடித்துக் கொண்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தினைப் பொறுத்த மட்டில் சைவ சமயம் முதன்மையான மதமாகக் காணப்பட்டாலும் கிறீஸ்தவம், இஸ்லாம் மற்றும் பௌத்தம் முதலிய மதங்களைப் பின்பற்றும் மக்கள் கூட்டத்தினர் ஐக்கியத்துடனும் புரிந்துணர்வுடனும் வாழ்கின்ற இடமாகப் பிரசித்தி பெற்றுள்ளமை அவதானிக்கத்தக்கது. இம் மதங்கள் ஒவ்வொன்றினதும் மத வழிபாடுகள், விழாக்கள் மற்றும் பண்டிகைகளின் போது அவற்றின் வழிபாட்டு முறைகள் மற்றும் மதச்சின்னங்கள் ஏனைய மதத்தினருக்கு குறித்த மதம் தொடர்பிலான புதிய அறிவினைப் பெற்றுக்கொள்வதற்கான தூண்டுதலை ஏற்படுத்துகின்றன. அவ்வகையில் ஒவ்வொரு மதம் சார்ந்தும் நடைபெறுகின்ற நிகழ்வுகளின் போது அதிகளவிலான சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்குரிய சாத்தியப்பாடுகள் உள்ளன.

- **சைவ சமய அடையாளங்கள்**

சைவ சமயத்தினைப் பொறுத்த வரை "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" ஔவையார் குறிப்பிடுவதற்குச் சான்றாக ஆலயங்களுக்குப் பஞ்சமில்லாத ஊரென்றால் அது யாழ்ப்பாணம் தான். குடா நாட்டில் காணப்படும் ஒவ்வொரு ஆலயங்களின் கட்டட சிற்ப வேலைப்பாடுகள் சிறப்பாகக் காணப்படுவதுடன் அவற்றின் திருவிழாக்கள் ஒவ்வொன்றும் தனித்துவமானவையாகக் காணப்படுகின்றமை அனைவரும் அறிந்த விடயமே.

யாழ்ப்பாணத்தில் நல்லூர் கந்தசுவாமி கோவில், நயினாதீவு நாகபூசணி அம்மன் கோவில், தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோவில், மருதனார்மடம் ஆஞ்சநேயர் கோவில், காரைநகர் ஈழத்துச் சிதம்பரம், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில், சிட்டிவேரம் கண்ணகை அம்மன் கோவில், மீசாலை சோலை அம்மன் கோவில், இணுவில் கந்தசுவாமி கோவில், தொண்டமானாறு செல்வச் சன்னதி கோவில், வல்லிபுர ஆழ்வார் ஆலயம், வல்வெட்டித்துறை இந்திர விழா, நாச்சிமார் கோவில், செகராசச் சேகரப் பிள்ளையார் கோவில், பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் போன்ற ஆலயங்களும் அவற்றின் திருவிழாக்களும் முக்கியத்துவம் பெறுகின்றன. இவற்றை விட ஏனைய ஆலயங்களும் அவற்றின் சிறப்புக்களும் குறிப்பிடத்தக்கவையாகக் காணப்படுகின்றன.

- **நல்லூர் கந்தசுவாமி கோவில்**

இலங்கையில் மிகவும் பிரசித்தி பெற்ற இந்துக் கோயில்களுள் நல்லூர் கந்தசுவாமி கோயில் முக்கியமானது. இது இலங்கையின் வடபகுதியிலுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டில், யாழ்ப்பாண நகரத்திலிருந்து சுமார் இரண்டு மைல் தொலைவிலுள்ள யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகரான நல்லூர் பதியில் அமைந்துள்ளது. யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் வம்சத்தின் முதலாவது அரசனான கூழங்கைச் சக்கரவர்த்தியின் அமைச்சனொருவனான புவனேகவாகு என்பவனால் இக் கோயில் கட்டுவிக்கப்பட்டதென யாழ்ப்பாண

வைபவமாலை கூறுகிறது. ஆனால் இது 15 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி ஆட்சிசெய்த கோட்டை இராச்சிய சிங்கள அரசனான சண்பகப் பெருமாள் என்பவனால் கட்டப்பட்டதென்ற கருத்தும் காணப்படுவது நோக்கத்தக்கது. இன்னொருசாரார் முன்னரே சிறியதாக இருந்த கோயிலைத் தனது ஆட்சிக்காலத்தில் புவனேகவாகு பெருப்பித்துக் கட்டியிருக்கக் கூடும் என்று குறிப்பிடுகின்றனர்.

- **கிறீஸ்தவ சமய அடையாளங்கள்**

இந்து மதத்தினை அடுத்து அதிகமான மக்கள் பின்பற்றுகின்ற மதமாக காணப்படுவது கிறீஸ்தவம் ஆகும். அந்தவகையில் கிறீஸ்தவ மதத்தினைப் பின்பற்றும் மக்கள் கூட்டத்தினர் பின்பற்றுகின்ற சடங்குகள் மற்றும் சம்பிரதாயங்கள் போன்றவற்றுடன் தேவாலயங்கள் மற்றும் அவற்றின் திருவிழாக்களும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன. கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலயம், இளவாலை புனித அந்தோனியார் மற்றும் சூசையப்பர் தேவாலயம் மற்றும் மாதகல் பகுதியில் அமைந்துள்ள அந்தோனியார் ஆலயம் போன்றவற்றின் கட்டட அமைப்பும் அவற்றின் திருவிழாக்களும் அதிசயம் மிக்கதாகக் காணப்படுகின்றன. யேசு பாலன் பிறப்பு மற்றும் குருத்தோலை ஞாயிறுப் பெருவிழா போன்றன அதிக சிறப்பிடம் பெறுகின்றன.



- **இஸ்லாம் சமய அடையாளங்கள்**

கிறீஸ்தவ மதத்தினை அடுத்து அதிகமான மக்களால் பின்பற்றப்படும் மதமாக இஸ்லாம் மதம் காணப்படுகின்றது. இஸ்லாம் மதத்தின் நோன்புத் திருநாள் மற்றும் ஹஜ்ஜுப் பெருநாள் போன்ற பண்டிகைகளும் யாழ்ப்பாணம் பெரிய பள்ளிவாசலின் கட்டட அமைப்பும் தனி அழகுடையவை. இவற்றைப் பார்வையிடும் நோக்கில் சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர்.



- **பௌத்த சமய அடையாளங்கள்**

பௌத்த மதத்திலே யாழ்ப்பாணம் நாகவிகாரை மற்றும் நைனாதீவு விகாரைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. வரலாற்றுக் காலத்தில் இலங்கையின் வடக்குப் பகுதியில் தமிழ்ப் பௌத்தர்கள் வாழ்ந்ததற்குரிய ஆதாரங்களும் கிடைத்துள்ளமை நோக்கத்தக்கது. இவ் விகாரைகளோடு சித்திரைப் புதுவருடப்பிறப்பு வெசாக் பண்டிகை மற்றும் பொசன் பண்டிகை காலங்களில் வெசாக் கூடுகளின் அலங்காரம் மற்றும் இதர நிகழ்வுகளைக் காண்பதற்கென அதிகமான மக்கள் படையெடுக்கின்றமை அவதானிக்கத்தக்கது.

இவ்வாறாக சமய தலங்களை மையமாகக் கொண்ட சுற்றுலாத் துறையினை அம் மதங்களின் பண்பாடு கலாசாரம் மற்றும் புனிதத் தன்மையைப் பாதிக்காத வகையில் அபவிருத்தி செய்து அப் பகுதி மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்பது பலரின் ஒருமித்த கருத்தாகக் காணப்படுகின்றது.

# மாஸ்லோவின் தேவை கோட்பாடு

மாஸ்லோவ் கூறும் தேவைகள் நிறைவேற்றப்படும் பொழுதுதான் வாழ்வில் உச்ச நிலையை அடைய முடியும் என குறிப்பிடுகின்றார். மனித தேவைகளுடன் அடக்கி அத்தொகுதிகளை அவற்றின் ஆற்றலின் படி ஏறு நிரலில் அமைத்தார்.

1. உடலியற் தேவை
2. பாதுகாப்புத்தேவை
3. அன்புத்தேவை
4. கணிப்புத்தேவை
5. தன்னிலை உணர்தல் தேவை

என்பனவாகும்.

ஒருவனுக்கு ஒரு தேவை நிறைவேற்றப்பட்ட பின்னரே அடுத்த தேவை எழுகின்றது என்பது இவரது கொள்கையாகும்.

எடுத்துக்காட்டாக பசி, தாகம், உடலியல் தேவைகள் ஒருவனிடத்தில் நிறைவேறிய பின் உயரத்தில் காணப்படும் தேவைகள் உணரவருகின்றன.

### 1. உடலியற் தேவைகள்

பசி, தாகம், ஒட்சிசன், நித்திரை, கழிவகற்றல், பாலியல் போன்ற உடலியல் தேவைகள் முக்கியமானதாக காணப்படுகிறது. இவை மற்றைய தேவைகளை விட வலிமையானதாகும்.

உணவுத்தேவை உள்ளவனுக்கு உணவு பற்றிய சிந்தனைகள், கனவுகள் என்பனவே காணப்படும். அதேபோன்று நீர்த்தேவை, காற்று என்பதோடு பாலியல் தேவையும் முக்கிய ஒன்றாக இனப்பெருக்கத்திற்கு அவசியமாகும். இவை உயிர் வாழ அவசியமானவையாகும்.



மேலும் இத்தேவைகளை நிறைவேற்ற ஊதியத்தின் மூலம் பெற்ற பணம் என்பது முக்கியமானது ஆகும். இத் தேவைகள் உள்ள போது அன்புறவோ, பாராட்டுதலோ தேவையாக இருக்கமாட்டாது என மாஸ்லோ குறிப்பிடுகின்றார்.

### 2.காப்புத் தேவை

உடலியற் தேவைகள் நிறைவேறியதும் நிரலில் உள்ள அடுத்துள்ள தேவையே காப்புத் தேவையாகும். இத் தேவை உடல், உள, பொருளாதார ரீதியான பாதுகாப்பைக் குறிக்கும். உடல் எனும் வகையில் உயிர் பாதுகாப்பு , விபத்தில் இருந்து பாதுகாப்பை பெறல் எனலாம். உள பாதுகாப்பு எனும் வகையில் உயிர் அச்சுறுத்தல், உளம் தொடர்பான பாதுகாப்பு எனும் நிலையில் அடையும். மேலும் தொழிலை பாதுகாத்துக் கொள்ளவும் அவசியம் என்கிறார்.

மேலும் காப்புத் தேவையை சீரான முறையில் பேண சட்டம் முக்கியமானதாகும். ஒருவர் நீண்ட காலம் உயிர் வாழ ஆசையை ஏற்படுத்தும் வகையில் காப்புத் தேவை என்பது முக்கியமாகும்.

### 3.அன்புத் தேவை/ சமூகத் தேவை

ஒருவனிடம் உடலியல் தேவை, காப்புத் தேவை பூர்த்தியான பின்னரே அன்புத் தேவையை நாடுகிறான் என்பதே மாஸ்லோவின் கருத்தாகும். இந்த அன்புத் தேவையானது ஒருவனிடம் அன்பை செலுத்தவும் , அன்பை பெற்றுக் கொள்ளவும் அவசியமாகும். அதாவது குடும்பம், நெருங்கிய உறவிடம் இருந்து பெறவும் சமூக உறவு நிலையை பேணவும் சமூகத்தோடு

இணைந்து கொள்ளவும் அவசியமாகிறது. முதல் இரண்டு தேவை திருப்தி அடைந்த பின் வருவதாகும்.

*4.கணிப்புத்தேவை/சுயமரியாதை*

அன்புத்தேவை தணிந்த பின்னர் இது சாதனை புரிவதற்கான தேவையாகும் . ஒருவர் மற்றவர்களால் மதிக்க வேண்டும் ,தனது செயல்களை புகழ வேண்டும் என ஆசைப்படுவதும் ஒருவனை ஊக்குவிக்கிறது. இக்கணிப்புத் தேவைகள் தணிக்கப்படாத போது சிக்கல் நிலைக்கு உண்டாக்கும். அதாவது ஒரு வீட்டிலும் பாடசாலையிலும் நல்ல கணிப்பை பெறாத ஒருவர் தீய வழிகளில் செல்ல வழிகோலும்.

*5.அடைவுத்தேவை/ சுயநிர்ணயத்தேவை/தன்னிலைஉணர்தல்*

நான்கு தேவைகளும் நிறைவேறிய பின்னரே தெரிந்து கொள்வதற்கும் புரிந்து கொள்வதற்குமான தேவைகள் எழும். ஒருவரின் அதிஉச்ச திருப்தியை உண்டாக்குவது, ஒருவனின் தன்னிடம் உள்ள உளவியல் ஆற்றலை விருத்தி செய்து சுயநிறைவு பெறுவதாகும். ஒருவனின் எந்த நிலையை அடைய வேண்டுமோ அதை அடைவதற்கான நிலை அவ் நிலையை அடையும் வரை அவனிடம் அதிருப்தி, அமைதியின்மை என்பன ஏற்படும் இவ்தேவை ஒருவருக்கொருவர் மாறுபடும். பாடல் திறமையுள்ளவன் பாடகனாகவும் நடனத் திறமை உடையவன் நடனக்கலைஞராகவும் சுய நிர்ணயத் தேவை காணப்படும்.

மாஸ்லோவின் ஐந்து விதமான தேவைகள் பற்றி விமர்சனைகளும் உள்ளன. மாஸ்லோவின் தேவை கோட்பாடு அனைவருக்கும் பொருந்துவதாக இல்லை. ஒருவருக்கு அன்புத்தேவையை விட கனிப்பு தேவை அவசியமாக காணப்படலாம்.

இவ்வாறு மாஸ்லோவின் தேவை கோட்பாடு
*1.அடிப்படைத்தேவை*
*2. இடைநிலைத்தேவை*
*3.உயர்வுத்தேவை*

என மூன்றாக கூறப்படுகின்றது. அடித்தள தேவை நிறைவேறிய பின்னரே உயர்நிலைத் தேவை பூர்த்தி செய்யப்படுகின்றது என்றவாறாக நோக்கலாம்.

ச.சஜீபன்
உளவியல் துறை
யாழ்பாண பல்கலைக்கழகம்

# துர்முனிகள்




முடிந்துவிட்ட திருவிழா
முடிச்சவிழ்த்துவிடப்பட்ட துர்முனிகள்
சதாகாலம் பலி கேட்கும்
கவுச்சி நாற்றமடிக்கும் தெருக்கள்
ஓடத்தொடங்கும் கள்ளத்தோணிகள்
சத்தான் படைசூழ
பரிவாரங்கள் ராஜயோகம்
முச்சந்தியில் முணுமுனுப்பு
தாவல்கள் தாராளமாய்
எதிர்ப்போர் இருட்டறைகளில்
நித்தில தேசத்தில்
நிலையாய் காலதேவன்
குடியமர்வு
போர்க்கப்படும் சால்வைகள்
நிறமூட்ட அறுக்கப்படும்
தலைகள்
சிலவேளைகளில் சாத்தான்கள்
கட்டப்படலாம் அடுத்த திருவிழாக்களில்

விக்கி சாரங்கன்

# இந்தியச் சுதந்திரத்தில் தமிழர்கள்

இந்தியாவின் சுதந்திரதினம் 15.08.2020 கொண்டாடப்பட்டிருக்கும் நேரத்தில் சுதந்திரப்போராட்டத்தில் ஈடுபட்ட சில தமிழர்களைப்பற்றிய சுருக்கமான தேடல் இந்த தொகுப்பு



### மகாகவி பாரதியார்

கவிஞர், எழுத்தாளர், பத்திரிகையாசிரியர், விடுதலை வீரர், சமூக சீர்திருத்தவாதி என பன்முகங்கள் கொண்டவர் சுப்பிரமணிய பாரதி. தமிழ் கவிதையிலும் உரைநடையிலும் தன்னிகரற்று விளங்கும் பாரதி, நவீன தமிழ் கவிதைக்கு முன்னோடியாகத் திகழ்பவர். தம் எழுத்துகள் மூலமாக மக்கள் மனதில் விடுதலை உணர்வை ஊட்டியவர். இவரது கவித்திறனை எட்டப்ப நாயக்கர் வியந்து பாராட்டி பாரதி என்ற பட்டத்தை வழங்கினார். 1949ஆம் ஆண்டு நாட்டுடைமை ஆக்கப்பட்ட பாரதியாரின் படைப்புகள் இந்தியாவிலேயே முதன்முதலாக நாட்டுடைமையாக்கப்பட்ட இலக்கியமாகும். பால கங்காதர திலகர், உ.வே.சாமிநாதையர், வ.உ.சிதம்பரனார், மகான் அரவிந்தர், விவேகானந்தரின் மாணவியான சகோதரி நிவேதிதா தேவி ஆகியோரைப் போற்றி பின்பற்றியவர்.



### சுப்பிரமணிய சிவா

அரசியலையும் ஆன்மீகத்தையும் விடுதலைப் போராட்டத்தில் இணைத்துப் போராடியவர். தமிழக மக்களுக்கு விடுதலைத் தாகம் ஏற்படச்செய்த சிறந்த பேச்சாளர் 'ஞானபாநு' என்ற இதழை நடத்தியவர். தனது வீரமிக்க பேச்சால் விடுதலை வேட்கையைத் தூண்டியதால் 'வீரமுரசு' என்று போற்றப்படுபவர்.

வ.உ.சிதம்பரனார் மற்றும் மகாகவி பாரதியார் ஆகியோருடன் இணைந்து விடுதலைப் போராட்டங்களில் தீவிரமாக செயல்பட்டவர். தேசிங்குராஜன், சிவாஜி உள்ளிட்ட நாடக நூல்களையும் வேதாந்த ரகஸ்யம், மோட்ச சாதனை ரகசியம் உள்ளிட்ட ஆன்மீக நூல்களையும் எழுதியுள்ளார்.

### கொடிகாத்த குமரன்

ஈரோடு மாவட்டத்தில் உள்ள சென்னிமலையில் பிறந்தார் குமரன். 1932 ஆம் ஆண்டு சட்ட மறுப்பு இயக்கம் தமிழகம் முழுவதும் தீவிரமடைந்தது. அப்போது, திருப்பூரில் 'தேசபந்து இளைஞர் மன்றம்' மறியல் போராட்டத்திற்கு ஏற்பாடு செய்தது. 1932 ஆம் ஆண்டு ஜனவரி 10 ஆம் தேதி நடந்த போராட்ட அணிவகுப்பின் போது கையில் இந்திய தேசியக் கொடியினை ஏந்தி, தொண்டர் படைக்குத் தலைமை ஏற்று முன் நடந்தார் குமரன். அந்த போராட்டத்தின் போது ஆங்கிலேய காவலர்களால் தலையில் தடியால் தாக்கப்பட்டார். தலையிலிருந்து ரத்தம் வழிய கீழே சரிந்தபோதும், கையில் இந்திய தேசியக் கொடியை ஏந்தியபடி தேசியக்கொடி தரையில் விழாமல் காத்தார். சிகிச்சைக்காக மருத்துவமனை சென்றவர் அங்கேயே உயிர் துறந்தார். திருப்பூரில் நடந்த போராட்டதில் உயிர் நீத்ததால் திருப்பூர் குமரன் என்றும் தேசியக் கொடியை ஏந்தியபடி வீரமரணம் அடைந்ததால் கொடிகாத்த குமரன் என்றும் அழைக்கப்படுகிறார்.





### சுந்தரலிங்கம்

வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட பிறகு அவருடன் போரில் பங்கு பெற்றவர்களை பற்றி நாட்டுபுற பாடல்களும், கூத்துகளும் இயற்றப்பட்டன. இப்படியாக இப்பகுதியில் வழங்கப்பட்ட நாட்டுப்புற பாடல்களை ஆய்வாளர் நா.வானமாமலை தொகுத்துள்ளார். இதனின் ஊடாக இப்போரில் பங்கு பெற்ற சுந்தரலிங்கம், வெள்ளையன், கந்தன் பகடை, முத்தன் பகடை , கட்டன கருப்பணன் போன்றவர்களை அறிய முடிகிறது.

சுந்தரலிங்கத்தின் பொறுப்பில்தான் கட்டபொம்மனின் தானியக்கிடங்கும், வெடிமருந்துக் கிடங்கும் இருந்தன. கட்டபொம்மனுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் மோதல் உருவானபோது சுந்தரலிங்கம் கட்டபொம்மனுக்கு பக்கபலமாக விளங்கினர்.
1799 செப்டம்பர் 8ம் தேதி சுந்தரலிங்கம் தனது முறைப்பெண்ணான வடிவுடன் ஆடுமேய்ப்பவர்களைப் போல வெள்ளையர்களின் வெடிமருந்து கிடங்குப் பகுதிக்குப் போனான். தீப்பந்தத்தைக் கொளுத்தியபடி சுந்தரலிங்கமும், வடிவும் வெடிமருந்துக் கிடங்கிற்குள் பாய்ந்தார்கள். பலத்த வெடிச்சத்தத்துடன் கிடங்கு தீப்பிடித்து எரிந்தது. சுந்தரலிங்கமும், வடிவும் இந்திய சுதந்திரப் போரின் முதல் தற்கொலைப் படை தாக்குதல் தொடுத்தவர்களானார்கள்.

அவர்களது வீரமரணத்திற்கு அடுத்த நாள் நடைபெற்ற போரில் பாஞ்சாலங்குறிச்சி ஆங்கிலேயர் வசமானது.

### வ.உ.சிதம்பரனார்

ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்கு வணிகம் செய்யவே வந்தனர். ஆனால் இந்திய ஆட்சியைக் கைப்பற்றி இந்திய நாட்டின் செல்வங்களை கொள்ளையடித்துக் கொண்டிருந்தனர். வ.உ.சி.யை இது கடுமையாகப் பாதித்தது. அவர் தனது எதிர்ப்பைத் தெரிவிக்க ஆங்கிலேயர்களின் வணிகத்தையே முதலில் எதிர்த்தார். "பிரிட்டிஷ் இந்திய ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி", இந்தியா இலங்கை இடையே கப்பல்களை இயக்கிக் கொண்டு இருந்தது. அது ஆங்கிலேயர்களின் வணிகத்துக்கே முக்கியத்துவம் கொடுத்தது. ஆதலால் வ.உ.சி. இந்தியர்களுக்காக ஒரு கப்பல் நிறுவனம் துவங்க தீர்மானித்தார்.
1906-ஆம் ஆண்டு அக்டோபர் 16-ஆம் நாள் "சுதேசி நாவாய்ச் சங்கம்" என்ற கப்பல் நிறுவனத்தைப் பதிவு செய்தார். (அதன் தலைவர் மதுரை தமிழ்ச்சங்கத் தலைவர், வள்ளல் பாண்டித்துரைதேவர்; சட்ட ஆலோசகர் சேலம் சி.விஜயராகவாச்சாரியார்). நிறுவனத்தின் மூலதனம் ரூ.10,00,000. சுதேசி கப்பல் நிறுவனத்தின் வெற்றியுடன் வ.உ.சி. திருப்தியடையவில்லை. அவர் மக்களிடையே விடுதலைப் போராட்ட உணர்வைத் தூண்ட நினைத்தார். இந்திய தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டும் ஆங்கிலேயர்களுக்கு எதிராக செயல்பட வ.உ.சி.க்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது.



லார்டு. ராய் இந்தியாவில் இருந்த ஆங்கில அரசு அதிகாரி. அவர் 1905-ஆம் ஆண்டு லண்டனில் நடந்த ஆங்கிலேய வணிகப் பெருமக்களின் கூட்டத்தில்,"இந்தியாவில் முதலீடு செய்யலாம். ஏனெனில் அங்கே தொழிற்சங்கம் இல்லை. அதனால் தொழிலாளர்களின் கூலி மிகக் குறைவு" என்று

பேசினார். இந்த வகையான பேச்சிலிருந்து இந்தியாவில் அந்த கால கட்டத்தில் தொழிலாளர்களின் நிலையை நாம் அறியலாம். தூத்துக்குடியில் கோரல் நூற்பாலை என்று ஒரு தொழிற்சாலை இருந்தது. அங்கே தொழிலாளர்களுக்குக் கூலி மிகக் குறைவு.ஆனால் அவர்கள் நாள் முழுவதும் இடைவேளை இல்லாமல் பன்னிரண்டு மணி நேரத்திற்கு அதிகமாக கடினமாக உழைக்கவேண்டும். அவர்களுக்கு விடுமுறை கிடையாது. தொழிலாளர்கள் ஏதேனும் தவறு செய்தால் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். தொழிலாளர்களின் அவல நிலையைப் பார்த்து வ.உ.சி. மிகவும் வருந்தினார். நூற்பாலை தொழிலாளர்களை வேலை நிறுத்தம் செய்யும்படி தூண்டினார். வ.உ.சி.யும் சுப்ரமணிய சிவாவும் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு அளித்தனர். பால கங்காதர திலகரின் சீடரான வ.உ.சிதம்பரனார் தென்னாட்டுத் திலகர் என்று போற்றப்படுபவர்.

## புலித்தேவர்

இந்திய விடுதலை வரலாற்றில் `வெள்ளையனே வெளியேறு' என்று முதன் முதலாக 1751 ஆம் ஆண்டில் வீர முழக்கமிட்டவர். இதனால் இந்தியாவின் முதல் விடுதலைப்போர் எனக் கருதப்படும் சிப்பாய்க்கலகத்திற்கும் (1857) முன்னோடியாகக் கருதப்படுகிறார். 1756 மார்ச்சு மாதம் திருநெல்வேலியில் மாபஸ்கானுடன் புலித்தேவர் நடத்திய போரில் புலித்தேவனின் உயிர்த்தோழன் மூடேமியாவை ஆங்கிலேயர்கள் துண்டு துண்டாக வெட்டி எறிந்ததால் மனமுடைந்த புலித்தேவன் போரை நிறுத்தித் திரும்பினார். அதனால் மாபஸ்கான் திருநெல்வேலியை தன்வசப்படுத்தினான். நெருக்கடியான சூழ்நிலையிலும் கூட ஆங்கிலேயருக்கு எதிரான போரில் டச்சுக்காரர்கள் மற்றும் பிரெஞ்சுக்காரர்களின் உதவியையும் புலித்தேவர் மறுத்துவிட்டார்.



## நீலகண்ட பிரம்மச்சாரி



1911ஆம் ஆண்டில் மணியாச்சி ரயில் நிலையத்தில் வாஞ்சிநாதனால் சுட்டுக் கொல்லப்பட்ட மாவட்ட ஆட்சியர் ஆஷ் கொலை வழக்கில் முதல் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்ட போது தான் நீலகண்டனின் பெயர் நாடு முழுவதும் பிரபலமானது. ஆனால், அதற்கு முன்பே இவரது விடுதலைப் போராட்ட ஈடுபாடு அளப்பரியதாக இருந்தது. இளம் வயதில் ௨0,000 போராளிகளை ஒன்று திரட்டி இந்திய விடுதலைப் போராட்டத்திற்கான புரட்சி இயக்கம் ஒன்றை தோற்றுவித்துப் போராடியவர்.

பாரதியாருடன் நெருங்கிப் பழகியவர். பாரதி புதுச்சேரியில் தலைமறைவாக இருந்த காலத்தில், இந்தியா பத்திரிகையை பொறுப்பேற்று நடத்தியவர். வாழ்வின் பெரும்பகுதியை இந்தியா, பாகிஸ்தான், மியான்மர் நாட்டுச் சிறைகளில் கழித்தவர். உணவில்லாமல் சென்னையில் அலைந்து திரிந்த நீலகண்ட பிரம்மச்சாரியைக் கண்டதும் தான் பாரதி 'தனியொருவனுக்கு உணவில்லை எனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்' என்று பாடினார். வாழ்வின் பிற்பகுதியில் துறவு மேற்கொண்டு மைசூரில் உள்ள நந்தி மலையடிவாரத்தில் ஆஸ்ரமம் அமைத்துக் கொண்டு வாழ்ந்தார். அப்போது தனது பெயரை ஸ்ரீ ஓம்காரானந்த சுவாமி என்றும் மாற்றிக்கொண்டார்.

இவ்வாறு பல தமிழர்கள் இந்திய சுதந்திர போராட்டத்தில் பெரும்பங்கு வகித்தனர்.

**நன்றி : இணையம்**
**தொகுப்பு : ஐ.வி.மகாசேனன்**

# முதுசம் (Mudusam)

அ.திருமருகன்
மாணவன்
இலங்கை சட்டக்கல்லூரி

கடந்த இதழின் தொடர்ச்சியாக தேசவழமையின் கீழான ஆதனங்களின் விரிவான வேர்களை தேடும் பயணத்தில் தேசவழமைச்சட்டத்தின் கீழான சொத்துக்கள் தொடர்பில் ஆண்கள் மற்றும் பெண்களுக்குரிய சட்டக் கடப்பாடுகள் மற்றும் சட்ட வரைமுறைகளின் அன்றைய வழக்காறுகள் தொடக்கம் இன்றைய காலம் வரை எவ்வாறு அவை மாற்றம் பெற்றிருக்கிறது மற்றும் அவை சார்ந்த சமகால சட்டத் திருத்தங்கள் பற்றியும் இன்றைய சாரல் அமைகிறது.

தேசவழமைச் சட்டத்தின் கீழான அதனுடைய பல்வேறு வகைப்பட்ட சொத்துக்கள் பற்றி தேசவழமை கோவையினுடைய 01ஆம் வாசகம் எடுத்து இயம்புகிறது.




இவ் வாசகத்தின் படி "பண்டைய காலத்திலிருந்து கணவனால் ஒரு திருமணத்தின் போது கொண்டு வரப்படுகின்ற அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் 'முதுசம்' என்று வரைவிலகணப்படுத்துகின்றது "

ஆகவே தேசவழமை கோவையின் கீழான நியதிகளின் படி 'முதுசம் எனப்படுவது கணவனுடைய ஆதனம் என்று விளங்கிக் கொள்ள முடியும்'.

ஆனபோதும், யாழ்ப்பாண திருமண உரிமைகள் மற்றும் வழியுரிமைகள் கட்டளைச் சட்டத்தின் 15ஆம் பிரிவின் கீழ் "ஆண் அல்லது பெண் ஒருவருடைய பெற்றோர் அல்லது எவரேனும் முன்னோர் ஒருவருடைய இறப்பின் விளைவாக அவருடைய வம்சாவழியாக வருகின்ற சொத்துக்கள் முதுசம் என ஏற்பாடு செய்கின்றது".

எனவே ஆணிற்கும் பெண்ணிற்கும் முதுசம் வந்து சேர முடியும்.

ஆகவே ஒரு ஆணிற்கு திருமணத்திற்கு முன்பதாகவும் அல்லது திருமணத்திற்கு பின்னராக முதுசம் எனும் ஆதனம் வந்து சேர முடியும். அதேபோன்று பெண்ணிற்கு முதுசம் என்கின்ற ஆதனமும் வந்து சேர முடியும் ஆனால் பெண்ணிற்கு முதுசமானது பெற்றோர் அல்லது முன்னோர் ஒருவருடைய இறப்பினால் மட்டுமே வந்து சேர முடியும்.

பெற்றோர் ஒரு பெண்ணிற்கு நன்கொடை அளித்து இருப்பின் அது முதுசம் அல்ல. அதேபோன்று பெற்றோர் ஒரு பெண்ணிற்கு திருமணத்திற்கு என சீதனமும் அளித்திருக்க முடியும். எனவே 'பெண்ணிற்கு முதுசம் என்பது வேறு நன்கொடையாக பெறப்பட்டவை மற்றும் சீதனம் எனப்படுவது தனித்தனியான ஆதனமாகும்'.

பெண்ணொருவரின் திருமணத்தினை நோக்காகக் கொண்டு வழங்கப்படுபவை "சீதனம்" ஆகும். இந்தச் 'சீதனம்' ஆனது திருமணம் ஒன்றுக்கு நீண்டகாலம் முன்பதாக கூட வழங்கப்படலாம்.

இவ்வாறு சீதனத்தை பெற்றுக்கொண்ட பெண் ஒருவர் பெற்றோரின் எஞ்சிய சொத்துக்களில் பங்கு அல்லது உரிமை கோர முடியாது.



ஆனால்!
சீதனம் பெறாத சகோதரிகள் ஆண் பிள்ளைகளுடன் சமமாகப் பெற்றோரின் சொத்துக்களில் வழியுரிமை பெறுவார்கள். இது பல்வேறு நீதிமன்ற தீர்ப்புகளின் படி தீர்மானிக்கப்பட்டது. எனவே பெண்பிள்ளை ஒருவருக்கு சீதனம் வழங்கப்பட்டுள்ள விடத்து அப்பெண் பெற்றோரினுடைய எஞ்சிய சொத்துக்களில் அதன் பின்னர் பங்கு உரிமை கோர முடியாது.

தேசவழமையினுடைய 03ஆம் பிரிவானது "சீதனம் பெற்றுப்போன பெண்பிள்ளை தாங்கள் பெற்றுக் கொண்ட சீதனத்துடனே நின்று விடுகின்றதேயல்லாமல் பிதா, மாதா காலம் சென்றதின் பின் தங்களுக்கு இன்னும் அவர்களுடைய அதில் உரிமைப்பங்கு உண்டு என வழக்குச் சொல்லவொண்ணாது" என ஏற்பாடு செய்கின்றது.

யாழ்ப்பாண திருமண உரிமைகள் மற்றும் வழியுரிமைகள் கட்டளைச் சட்டத்தின் உடைய 33ஆம் பிரிவானது மேற்கூறப்பட்ட விடயத்தினை வேறுவிதமாக வலியுறுத்துவதை காணக்கூடியதாக உள்ளது.

இதன்படி ஆண் பிள்ளைகளும் சரி பெண்களாயினும் சரி தமது பெற்றோரிடமிருந்து ஏதேனும் சொத்தினை முன்னர் பெற்றிருந்தால் அவர்கள் பெற்றோர் இறந்த பின்னர் அந்த இறந்த பெற்றோரின் மரபுரிமையாளராக வரவேண்டுமாயின் தாம் ஏற்கனவே இறந்த பெற்றோரிடம் இருந்து பெற்ற அனைத்து சொத்துக்களையும் கொண்டுவந்து ஒன்று சேர்த்த பின்னர் மற்றைய மரபுரிமையாளர்களுடன் இறந்த பெற்றோரின் முழுமையான அதிலே தமது பங்கை பெற்றுக்கொள்ள முடியும் என வெளிப்படுத்துகிறது.

ஆரம்ப காலத்தில் தந்தையின் சொத்துக்கள் ஆண் பிள்ளைக்கும் தாயின் சொத்துக்கள் பெண் பிள்ளைக்கும் என்றான விதி இல்லாதொழிந்து ஒரு சிறந்த திருமணத்தை மேற்கொள்ளும் பொருட்டு பெற்றோரின் சொத்துக்களில் பெண்பிள்ளைக்கு சீதனம் வழங்கப்படுகின்றது. அச் சொத்துக்களில் "பெற்றோர் உயிருடன் இருக்கும் காலப்பகுதியில் ஆண்பிள்ளைகள் எதனையும் கோர உரிமை கொண்டவர்கள் அல்ல!"

தேசவழமையின் பழைய ஏற்பாடுகளின்படி முதுசம் ஆன ஒரு சொத்து ஒன்றினது விற்பனையால் பெறப்பட்ட பணத்தை கொண்டு திருமணத்தின் பின்பு அசையா சொத்து ஒன்றை கொள்வனவு செய்ததால் அச் சொத்தானது மீண்டும் முதுசம் என்றே அழைக்கப்பட்டது.

யாழ்ப்பாண திருமண உரிமைகள் மற்றும் வழியுரிமைகள் கட்டளைச் சட்டத்திற்கான 1947 ஆம் ஆண்டில் 58 ஆம் இலக்க சட்டத்திருத்தம் மூலம் இந்த நிலை மீண்டும் உறுதி செய்யப்பட்டு முதுசம் ஒன்றினது விற்பனை மூலம் பெறப்பட்ட பணத்தை கொண்டு திருமணத்தின் பின்னர் அசையாத சொத்துக்கள் வாங்கினால் அது தொடர்ந்தும் முதுசமாகவே இருக்கும் என்று வரைவிலக்கணப்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாண திருமண உரிமைகள் மற்றும் வழியுரிமைகள் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் மனைவி தனது திருமணத்தின்போது அல்லது திருமணம் நிலையாக உள்ளபோது நன்கொடை அல்லது வழியுரிமை என்ற வழியாக வருகின்ற அல்லது கொள்ளப்படுகின்றன சொத்துக்கள் அத்தனையும் அவருடைய தனிப்பட்ட

சொத்துக்கள் ஆகும்.

மனைவியின் தனிப்பட்ட சொத்துக்கள் கணவரின் கடன் அல்லது ஏதேனும் ஈடுபாடுகளுக்கு பொறுப்பாகமாட்டாது.

அசைகின்ற சொத்துக்கள் தொடர்பில் மனைவியானவர் கணவனின் சம்மதமின்றி அவற்றைக் கையாளவும் விற்பனை செய்வதற்கும் அதன் சார்பான அத்துணை முழுமையான தத்துவத்தையும் உடையவராக காணப்படுவார்.

மாறாக அசையாத சொத்துக்கள் தொடர்பில் கணவனினுடைய எழுத்திலான சம்மதத்தினுடனேயே அவற்றைக் கையாளவும் விற்பனை செய்வதற்கும் உரிய முழுமையான தத்துவத்தை உடையவராவார்.

ஆனால்!
கணவன் நியாயமற்ற முறையில் சம்மதம் அளிக்கமறுக்கும் இடத்திலே மாவட்ட நீதிமன்ற அனுமதியைப் பெற்று அவற்றின் விற்பனையை செய்ய முடியும்.

அதேபோன்று சட்டத்தின் 7ஆம் பிரிவின் கீழ் கணவன் தனது திருமணத்தின்போது அல்லது திருமணம் நிலையாக உள்ளபோது நன்கொடை அல்லது வழியுரிமை வகையாக வருகின்ற அத்தனை சொத்துக்களும் அவரின் தனிப்பட்ட சொத்துக்கள் ஆகும். கணவன் சொத்துக்களை கையாள அல்லது விற்பனை செய்ய முழுமையான தத்துவங்களை கொண்டுள்ளார்.

பண்டைய தேசவழமையின் படி ஆண்பிள்ளை ஒருவர் அவரது திருமணத்தின் முன்பதாக பெற்றோருடன் வாழ்கின்ற காலத்தில் உழைத்த அல்லது வாங்கப்பட்ட சொத்துக்கள் எதனையும் தான் கொண்டிருக்க முடியாது. அது பெற்றோரின் பொதுவான சொத்துக்களின் பங்காக மாறிவிடும்.

ஆனபோதும் 1911 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க யாழ்ப்பாணம் திருமண உரிமைகள் மற்றும் வழியுரிமைகள் கட்டளைச்சட்டம் இந்நிலையை மாற்றி திருமணம் செய்யாத போது ஆண்பிள்ளையினால் உழைக்கப்பட்ட சொத்துக்கள் பெற்றோரின் தேடிய தேட்டம் அதாவது பெற்றோரின் பொதுச் சொத்துக்கள் என்ற வகையில் கொண்டுவரப்படாது எனும் சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டது.

எனவே தற்போது அத்தகைய உழைப்பால் பெறப்பட்ட சொத்துக்கள் அந்த ஆண் பிள்ளையினுடைய தனிப்பட்ட சொத்துக்கள் ஆகும்.

உதாரணமாக
நல்லையா எதிர் பொன்னம்மா வழக்கில் கணவனால் அவரது திருமணத்திற்கு முன்பதாக அவரது உழைப்பிலிருந்து சேமிக்கப்பட்டது அவரது தனிப்பட்ட ஆதனம் என தீர்க்கப்பட்டது.

சாரல் தூறும்.....



## வேட்டையில் சிக்கிய சிங்கம்!

குளிர் பனியின் எச்சங்கள், பச்சை மரங்களிலெல்லாம், நீர்த்திவலைகளாய் மாறியிருந்தன...
பகலவன் தன் ஒளிக்கரங்களை நீட்டிப் பரந்து விரிந்து கீழை வானிலிருந்து மெல்ல எழுகின்றான்...
காட்டுக் கிளிகளும், இரட்டைவால் குருவிகளும், கத்தும் ஒலி எங்கும் நிறைந்திருந்தது!
மகாவலி ஆற்றின் நீர் என்றுமில்லாதவாறு குளிர்ச்சி நிரம்பியிருந்தது...
திக்கயவின் தெற்கே விரியும் அடர்ந்த வனம்....
குரங்குகள் கிளை மாறி மாறித் தம் குட்டிகளைக்காவிய வண்ணம் தாவிக் கொண்டிருந்தன...
புள்ளி மான் கூட்டங்கள் அந்தப்புற்றரை எங்கும் பரவி மேய்ந்து கொண்டிருந்தன...
கூட்டம் கூட்டமாக யானைகள் ஆடி அசைந்து சென்று கொண்டிருந்தன...
யாரும் தொலைவில் வருகிறார்களா? என்று பார்ப்பதற்கு கிளையின் உச்சிக்குச் சென்ற அந்த குரங்கு அலறியடித்தவண்ணம் கீழே இறங்க மற்ற குரங்குகளும் அலறியபடி சென்று காட்டுக்குள் மறைந்து கொண்டன...

ஆம்... அந்தக் காட்டில் சம்பந்தமே இல்லாத இருவர்!
ஒருவர் எமக்குத் தெரிந்த இளவல் காசியப்பன்!
மற்றையது நமக்கு இன்னும் அறிமுகமாகாத உன்னிச்ச...

"உன்னிச்ச... நான் மறுபடியும் கேட்கிறேன் என்று கோபப்படாதே...! இந்த வனம் உனக்குப்பழக்கப்பட்டது தானே?"

"என்னையா வணிகர் ஏதோ வேட்டை தெரியும் என்று கூறிக்கொண்டு, அம்பு...வில்...ஈட்டி... என்றும், போதாக்குறைக்கு கவண் கற்களோடும் புறப்பட்டுவிட்டீர்...! இந்த காட்டுக்கு அச்சப்படுகின்றீரே....."
"அதெல்லாம் ஒன்றுமில்லை...நான் முன்பு வேட்டையாடிய காடுகள் இந்த காட்டைப் போல அடர்த்தியானவை அல்ல! தலைநகரத்தைச்சூழ உள்ள காடுகள்...."

"அப்படியா நான் பிறந்ததற்கு, இந்த இருபத்தோரு வருடங்களில் ஒரு முறையேனும் நகரத்திற்கு வந்ததே கிடையாது ! பிறகு எனக்கு அங்கே வனம் எப்படி இருக்கும் என்றும் தெரியாது தானே...ஹூம்..."

ஜீவா ஷஜீவனின்

# சிங்கிரித்தலைவன்

ஆட்சி 07

சற்று தூரம் வரை அவர்களுக்கு இடையில் உரையாடல் ஏதும் இடம்பெறவில்லை. அடர்வனத்தின் ஒற்றையடிப்பாதை வழியே பச்சை அழகைப் பருகியவாறே நடந்தனர்!

அந்த நிசப்தத்தை கலைக்கும் விதமாகத் தூரத்தில்....இல்லை...தூரத்திலும் இல்லை... அருகிலும் இல்லை... எங்கோ ஓரிடத்தில் காட்டு யானையின் பிளிறல் கேட்டது! அந்தப் பிளிறல் சாதாரண பிளிறலை விட வேறுபட்டிருப்பதை உன்னிச்ச அறிந்து கொண்டான்!

"யானை வருகுது........!!!"

"ஹா ஹா ஹா ஹா.... என்னப்பா ஏதோ...இது உனக்கு பழக்கப்பட்ட காடு என்று கூறி என்னிடம் நாணயம் பெற்று தானே வந்தாய்? இப்போது இப்படி பயப்படுகிறாய்...?" என்றவாறு,

காசியப்பன் இடக்கையில் வைத்திருந்த ஈட்டியை வலக்கைக்கு மாற்றிக் கொண்டான்!

"வணிகரே... உங்களின் இந்த மின்னும் குற்றி நாணயங்களுக்கு என் ஊரில் ஒரு கொத்து நெல் கூட கிடைக்காது...

தெரியுமா? உங்களுடைய நகரத்தில் தான் இதற்கு மதிப்பு!" சலித்துக்கொண்டான் உன்னிச்ச...

"இது பற்றி கதைப்பதற்கு இப்போது நேரமில்லை நீர் அந்தப் பட்ட பின்னால் மறைந்து கொள்ளும் யானையை நான் பார்த்துக்கொள்கிறேன்!"

என்றவாறு திரும்பிய காசியப்பனை ஒரு வினாடி பரிதாபமாகப் பார்த்த உன்னிச்ச, மறு கணம், ஏதோ நினைப்பு வர பெற்றவனாக தன் கையால் காசியப்பனின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு பட்ட மரத்தின் பின் அமர்த்திக்கொண்டான்!

"உனக்கு என்ன பைத்தியமா? வேட்டையாட வந்தாயா....இல்லை வேறுதேவைக்காக வந்தாயா....? எதற்காக என்னை இழுத்து தடுத்தாய்? தனியாக வரும் யானையை என் ஈட்டிக்கு இரையாக்கியே தீருவேன்!"

கோப மிகுதியாய் கடிந்து கொண்ட காசியப்பன் விரல்களால் ஈட்டியை இன்னும் இறுகப் பற்றிக்கொண்டான்!

"உமக்குத் தெரியாது காட்டினுள் கூட்டமாகத் திரியும் யானைகள் சாந்தமானவை... மனிதர்களைக் காண நேரினும் தம் போக்கில் போய்விடும்...ஆனாலும் கூட்டத்தை விட்டும் தனித்து வரும் யானை மதம் பிடித்து அலைவது ... எதிர்ப்படும் எதையும் துவம்சம் செய்து விடும் அதன் கால்களில் இட்டு நெரித்து விடும் ஐயா!"

பயமும் பதட்டமும் கலந்த உன்னிச்சவின் கூற்றில் உண்மை இருப்பது காசியப்பனுக்குப் புரிந்தது!



மூச்சை இழுத்து விட்டு தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்ட உன்னிச்ச, தன் இடைக் கச்சையை இறுக்கியவண்ணம்,

"யானை ஒருவேளை எம்மைத் துரத்த நேரின் நேரே ஓட வேண்டாம்... வளைந்து நெளிந்து ஓடும் வணிகரே!" என்றான்!

உன்னிச்சவின் கண்களில் தெரிந்த பயத்தை காசியப்பன் அளவிடுவதற்குள் அந்த யானை இவர்கள் மறைந்திருந்த பட்ட மரத்தின் மேற்புறத்தை முறித்தெறிந்தது!

"ஓடு..... ஓடு....."

வில்லில் விடுபட்ட அம்பனை இருவரும் இரு திசைகளில் வெளிப்பட்டு ஓடினர்! யானை இவர்கள் இருவரையும் பார்த்து தன் துதிக்கையை உயர்த்திப் பிளிறியது! மிக மூர்க்கமாக தலையை

அங்குமிங்குமாக ஆட்டியபடி துரத்தியது!
இருவரும் முன்னர் ஆலோசித்தது போலவே வளைந்து நெளிந்து ஓடினார்கள்....
காசியப்பன் ஓடும் போதே தன் வாளை உருவினான்... ஓட ஓட மரக்கிளைகளை வெட்டி வெட்டி ஓடினான்! அது உன்னிச்சவுக்குப்புரிந்தது.... யானை காட்டை உள்நோக்கி ஊடறுத்து இருவரையும் கலைத்தது!


தமது பார்வையில் இருந்து யானை விடுபட்ட பின்னும் வெகு தூரம் ஓடி ஒரு சிற்றாற்றின் கரையை அடைந்தார்கள்! அங்கே கிடந்த சிறிய பாறையில் அமர்ந்து கொண்டு மூச்சை வேகமாக உள்ளிழுத்து வெளிவிட்டார்கள்! சிறிது நேரத்தில் களைப்பை நீக்க ஆற்று நீரை அருந்தலாம் என பின் பக்கம் திரும்பினான் உன்னிச்ச. ஒருகணம் திகைத்தபின் தன்னைத் தேற்றிக் கொண்டு குத்த வைத்து உட்கார்ந்து இருந்த காசியப்பனின் தோளில் தன் இடக்கையால் பற்றினான்!

“என்ன உன்னிச்ச... இப்போது யானையா புலியா?”
“புலியும் இல்லை...யானையும் இல்லை வணிகரே...சிங்கம்....!”
“என்ன சொல்கிறீர்...?” என்றவாறு திரும்பிய காசியப்பனைப் பார்த்துவிட்டு தன் ஒருகையை ஒரு திசையில் நீட்டி சுட்டிக்காட்டினான்!

“ஆஹா...ஆஹா...” என்றவாறே சட்டென எழுந்தான் காசியப்பன்!
அவன் கண்கள் அசையவில்லை இமைகளும் இமைக்கவில்லை! ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு பின்பும் தன் புகழ் மழுங்கடிக்கப்பட்டாலும், தன் வரலாறு தன் செயல்களால் களங்கப்பட்டாலும்... வானுயர எழுந்து அவன் புகழை உலகத்துக்கும் மேலைநாட்டு வரலாற்று ஆசிரியர்களுக்கும், மேல் நாட்டு மக்களுக்கும் எடுத்துச்சொல்லப்போகும் ஒன்றையல்லவா அவன் கண்கள் கண்டன.... தன்னையும் இலங்கை வரலாற்றையும்.... ஏன் உலக வரலாற்றையும் பின்னிப் பிணைக்கப்போகும் பெரும் பொக்கிஷம் அல்லவா அவன் கண்மணிக்குள் சிக்கிக் கிடந்தது!

“வணிகரே பயந்து விட்டீரா? இது சிங்கமன்று சிகரம்! அசைந்து எழுந்து வருவதற்குள் ஓடிவிடுவோம்... ஹா ஹா ஹா....”

“ஆமாம்.... உன்னிச்ச...இது சிங்கமும் அன்று



சிகரமும் அன்று சிங்கச்சிகரம்....சிங்ககிரி!!!”

“சிங்கரி.....ஆஹா அருமையான பெயர்!... உண்மையில் நீர் வணிகர் தானா?”

காசியப்பன் தன் இரகசியங்கள் இவனுக்குத் தெரிந்தனவோ என்ற ஐயத்தில் பார்த்தான்....

“இல்லை நீங்கள்....வணிகரா..? அல்லது கவிஞரா? பெயரெல்லாம் கூட வைத்துவிட்டீர்கள்! அரசிடம் கேட்டு இந்தச்சிகரத்தை தங்கள் மின்னும் உலோகங்களை கொடுத்துப் பெற்று விடுங்கள் ஹா ஹா ஹா ஹா ஹா...”

பாவம் உன்னிச்ச.... விலை கொடுத்தா காசியப்பன் அந்த இடத்தை வாங்க வேண்டும்? கண்ணசைத்தால் போதுமே...அதை அவன் அறிந்திருக்க வாய்ப்பில்லைத்தான்! ஒருவேளை எதிர்காலத்தில் அதை அவன் அறிந்து கொள்ளலாம்...! பொறுத்திருந்து பார்ப்போமே!

வளரும்...

# ஒன்றாவோம்!!!



பிரிவுகளாய் பிரிந்து விட்டோம் -ஏன்
பிரிவுகளுக்குள்ளும் பிரிவை
விதைத்தோம்...

வெளிச்சம் வரும் என சொல்லி
வெளியில் வர திண்டாட்டம்
பகிரங்கம் அற்ற வேடிக்கையால்
பகைவனுக்கு கொண்டாட்டம்...
எதிரி வேசம் பூண்டால் அது
எமை அழிக்கும்...

தோல்வியை மாற்றிடவே,
தோழமையே கை கொடுக்கும்.
புரிதலற்று வாழ்ந்துவிட்டால்
புறம்தள்ளி விடபடுவோம்...
அறிந்து கொண்டு செயற்படுவீர்...
அனைத்தும் நம் வசமே...

இனியா

**2011 உலகக்கோப்பை....**



*2010 இன் சில சறுக்கல்கள் யுவராஜ் சிங் மீதான எதிர்பார்ப்பை குறைத்து இருந்தாலும், 2011 ஆம் ஆண்டு ஆசிய துணைக்கண்டத்தில் நடக்க இருந்த உலகக்கோப்பைக்கான இந்திய அணியில் யுவராஜ் முக்கியமான துருப்புச்சீட்டாக இருந்தார். காரணம் துணைக்கண்ட ஆடுகளங்களில் யுவராஜ் இன் துடுப்பாட்ட சராசரி அதிகம் அத்தோடு தேவையான நேரங்களில் சுழல்பந்துவீச்சிலும் கைகொடுக்க கூடிய சகலதுறை ஆட்டக்காரர். உலகக்கோப்பைக்கான இந்திய அணி பலமன அணியாக அறிவிக்கப்பட்ட போதும் வழக்கம் போல பந்துவீச்சு மீண்டும் கவலைக்குரியதாகவே இருந்தது. எது எப்படியோ சச்சின் டெண்டுல்கரிற்கு இறுதி உலகக்கிண்ணம். சச்சின் என்ற மகத்தான வீரனுக்கான கௌரவப் பரிசாக இந்த உலகக்கோப்பையை வென்று கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தது இந்திய அணி.*




7

*அக்னி*

*சச்சின் டெண்டுல்கர், சேவாக், கம்பீர், கோலி, யுவராஜ், தோனி, ரெய்னா, அஸ்வின், ஹர்பஜன் சிங், சகீர் கான், நெஹ்ரா, முனாப் பட்டேல், சிறீசாந்த், யூசுப் பதான், சாவ்லா என பலமான ஒரு அணியும் மிகப்பரிச்சயமான ஆசிய துணைக்கண்ட ஆடுகளங்களும் இந்திய அணிக்கு ஒரு பொன்னான வாய்ப்பை உருவாக்கி இருந்தது. தொடரின் முதல் போட்டியிலேயே இந்திய அணி பங்களாதேஷ் அணியை பந்தாடியது. சேவாக், ஹோலி சதம் விளாச இலகு வெற்றி பெற்றது இந்திய அணி.*

*அடுத்தடுத்து நடைபெற்ற லீக் ஆட்டங்களில் யுவராஜ் சிங் 2007 உலக கோப்பையில் இந்திய அணிக்கு எவ்வாறு உந்துசக்தியாக இருந்தாரோ அதே போல மீண்டும் செயற்பட தொடங்கினார். தொடர் முழுவதுமாக ஒரு சதம், நான்கு அரைச்சதங்கள் உள்ளடங்கலாக 362 ஓட்டங்களையும், ஒரு ஐந்து இலக்குகள் கொண்ட பந்துவீச்சு பெறுதி உட்பட மொத்தமாக 15 இலக்குகளையும் வீழ்த்தி 28 வருடங்களின் பின்னர் இந்திய அணி உலகக்கோப்பையை வென்றெடுக்க முக்கிய காரணியாக இருந்தார். குறிப்பாக மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிராக பெற்ற சதம், காலிறுதிப்போட்டியில் பலமான நடப்பு சம்பியன்கள் ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக ஆட்டமிழக்காமல் பெற்றுக்கொண்ட அரைச்சதம் என்பன அந்த தொடரின் சிறப்பான இன்னிங்க்ஸ்களாக கருதப்பட கூடியவை. அதிலும் ஆறாவது இலக்குக்காக ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக ரெய்னாவுடன் ஆடிய அந்த இணைப்பாட்டம் தான் இந்திய அணியின் கிண்ணக்கனவின் பெரிய மைல்கல்லாக அமைந்தது. 2007 உலக கோப்பையின் அரையிறுதியில் ஆஸ்திரேலிய அணிக்கு எமனாக எப்படி அமைந்தாரோ மீண்டும் ஒரு முறை ஆஸ்திரேலியர்களின்*






யுவராஜ் சிங் இன் பெறுபேறு அந்த தொடரின் சிறந்த வீரர்கள் உள்ளடக்கிய அணியிலும், 2011 ஆம் ஆண்டிற்கான சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒருநாள் போட்டி அணியிலும் பெயரிடப்பட்டு இருந்தார்.

இரண்டு உலகக்கோப்பைகளை இந்திய அணியின் கைகளில் பெற்றுக்கொடுத்த தங்கமகனிற்கான சோதனையும் கூடவே காத்திருந்தது. தொடர் முழுவதும் மூச்சு எடுக்க சிரமப்பட்டு கொண்டு இருந்த யுவராஜ் சிங் நுரையீரல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இருந்தது உறுதிப்படுத்தப்பட்டது.

கிண்ணக்கனவை தவிடு பொடியாக்க தவறவில்லை இந்த யுகவீரன்.

இந்த உலக கோப்பை தொடரில் பல சாதனைகளுக்கு சொந்தக்காரனாக மாறி இருந்தார் யுவராஜ் சிங். ஒரே உலகக்கிண்ணத்தில் நான்கு ஆட்டநாயகன் விருதுகள் வென்று ஒரு உலகக்கோப்பையில் அதிக ஆட்டநாயகன் விருதுகள் வென்ற நான்கு ஆட்டநாயகன் விருதுகள் பெற்ற அரவிந்த டி சில்வா(1996), லான்ஸ் குளூஸ்னர்(1999) ஆகியோரின் சாதனையை சமன் செய்தார். அத்தோடு தொடர் நாயகனுமாகவும் அறிவிக்கப்பட்டார். அத்தோடு ஒரு உலகக்கோப்பையில் 300 க்கும் அதிகமான ஓட்டங்களை பெற்றதோடு 15 இலக்குகளிற்கு மேல் கைப்பற்றிய முதலாவது சகலதுறை ஆட்டக்காரனுமானார் யுவராஜ் சிங். அயர்லாந்து அணிக்கு எதிராக அரைச்சதம் பெற்றதோடு அதே போட்டியில் ஐந்து இலக்குகளையும் வீழ்த்தியதன் மூலம் ஒரு உலக க்கோப்பை போட்டி ஒன்றில் அரைச்சதமும் ஐந்து இலக்குகளும் வீழ்த்திய முதல் வீரரானார். இவ்வளவு சாதனைகளோடு இந்திய அணிக்கு கிண்ணம் வென்று கொடுத்த நாயகன் இறுதிப்போட்டியின் இறுதித்தருணத்தையும் அணித்தலைவர் தோனியோடு களத்தில் பகிர்ந்து கொண்டார். அந்த உலகக்கோப்பையில்

களத்தில் இந்திய அணியின் வெற்றிக்காக எதிரணிகளுடன் போராடிய உன்னதமான வீரன் மீண்டும் கிரிக்கெட் ஆட வேண்டுமானால் புற்றுநோயுடன் போராட வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டான். புற்றுநோயுடனுனான போராட்டத்திலும் வென்று மீண்டு வருவான்......

